# மிளகாய்த் தட்டுப்பாடு நீங்கும்; 386 தொன் இறக்குமதி!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தந்தி: ஈழநாடு  தொலைபேசி எண்: 49  போன்: 389

மலர் 12  இதழ் 349  தேசிய தினசரி

சாதாரண வருடம் தை 16  ஜுமாதுல் ஆகிர் 1  வெள்ளிக்கிழமை (29-1-71)

கோட்டை, வியாழன் மிளகாய் வெங்காயம்கூடுதலான தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது கடந்த வாரம் 386 தொன் மிளகாய் கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறைமுகத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட வெங்காயத்தின் தொகை 1,081 தொன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டில் மிளகாய்க்கு இருந்துவந்த தட்டுப்பாடு நீங்கும் என்று கருதப்படுகிறது.

## 41 பேர் கைது

கம்பஹா, வியாழன் கம்பஹாவில் உள்ள வீடு ஒன்றில் வைத்துச் சேகுவேரா இயக்கத்தினர் என்று சந்தேகிக்கப்படும் 41பேரை பொலிசார் கைதுசெய்தனர்.

இரகசியக் கூட்டம் நடத்திக்கொண்டிருப்பதாகக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று இவர்களை மடக்கிப் பிடித்தனர். இவர்கள் அனைவரையும் இரகசியப் பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

# தமிழ்க் காங்கிரஸ் எம்.பி.க்கள் அரசாங்கத்துடன் சேர முடிவு

## அறிக்கை மூலம் தமிழ் மக்களுக்கு விளக்குவர்

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் எம். பி.க்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கத்துடன் விரைவில் சேர்ந்து இயங்கத் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது

தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களுக்கும், நிதிஅமைச்சர் டாக்டர் என் எம் பெரேராவுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்தே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் டாக்டர் என் எம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்களான நல்லூர் எம் பி திரு வி அருளம்பலம், வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா, கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி ஆகியோருக்கும், அமைச்சருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது

அரசாங்க கட்சி பிரதம கொறடாவுக்கு தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களின் விண்ணப்பத்தை அனுப்பும்படியும், இதன் மூலம் உத்தியோகபூர்வமாக ஆராயப்பட்டு அரசாங்கத்தில் அங்கம்வகிக்க அனுமதிபெற்றுக் கொள்ளலாம் என்றும் டாக்டர் என் எம் பெரேரா எம் பிக்கள் மூவரிடம் கூறியதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ளும் நடவடிக்கை மேற்கொண்டது சம்பந்தமாக விரைவில் அறிக்கை ஒன்றின்மூலம் தமிழ் மக்களுக்கு தமிழ்க்காங்கிரஸ் எம் பி க்கள் விளக்குவார்கள் குறிப்பாக தமது கட்சிக்கு வாக்களித்த 1,15,000 வாக்காளருக்கு தமது நடவடிக்கைகுறித்து விளக்கவிருப்பதாக தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் வெளிவித்தார்.

தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்கள் அரசாங்கத்துடன் சேர்ந்துஇயங்க முடிவுசெய்த போதிலும், அது தனிக்கட்சியாகவே இயங்குமென இந்த பேச்சுவார்த்தையின் போது கலந்துகொண்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## கனடா பிரதமர் தாயகம் திரும்பினர்!

கோட்டை, வியாழன் பிரிட்டன்தென்ஆபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பனை செய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமித்த குழு தனது அறிக்கையை முடிப்பதற்கு முன்னர் ஆயுதம் விற்பனை செய்யப்படுமாயின் அது கவலைக்குரிய விஷயமாகும் என்று கனடாப்பிரதமர் திரு. பியர்ரே ட்ரூடோ தெரிவித்தார்:

இன்று அலரிமாளிகையில் நடந்த விருந்துபசாரமொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்:

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த கனடா பிரதமர் இன்று பகல் 1 மணியளவில் தாயகம் புறப்பட்டார்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலயத்திலிருந்து புறப்பட்ட திரு. ட்ரூடோவை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவும் அமைச்சர்களும் வழி அனுப்பிவைத்தனர். பெருந்திரளான மக்களும் விமான நிலயத்தில் வழிஅனுப்ப குழுமியிருந்தனர்.

சிங்கப்பூரில் நடந்த சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் அங்கிருந்து இலங்கையின் விருந்தினராக இங்கு விஜயம் செய்தார்.

தமது நாட்டின் சார்பில் தமக்கு அளிக்கப்பட்ட உபசாரங்களுக்கு கனடாப் பிரதமர் பிரதமர் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்காவுக்கு நன்றி தெரிவித்தார்.

## 'நாட்டை வாழ்விப்பவர்கள் மலையகப் பெண்கள்'

நாவலப்பிட்டி, வியாழன் "சமூகசேவை பெண்களுக்குக் கஷ்டமான தொழில். சமூகசேவையில் இறங்கிப் பணியாற்றும் பெண்களுக்கு எத்தனையோ தொல்லைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிநேரிடலாம்."

இவ்வாறு நாவலப்பிட்டி பெண்கள் சமூகமன்றம் நடாத்திய கலைவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய நியமன எம்.பி ஜனுப் அஸீஸ் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், "ஆண்கள் பிரதமர்களாகலாம். ஆனால் ஒரு சிறந்த சமயற்காரராகிவிட முடியாது. ஏனெனில் சமையற்கலை பெண்களுக்கென்றே இயற்கையாக ஏற்பட்டதொரு கலையாகும் பெண்கள் நமது பிரதமரைப் போல வாழவேண்டும். பெண்களுக்கு ஆண்களைவிட சக்தி அதிகம். அவர்கள் தேகாரோக்கியத்திலும் ஆண்களைவிட சிறந்தே விளங்குகின்றார்கள். பெண்கள்சங்கம்அமைத்து தொண்டாற்றமுனையும்போது அதன் மகத்துவம் பலவழிகளிலும் உயர்ந்துவிடுகின்றது. இந்த ரீதியில் தொண்டாற்ற முன்வந்துள்ள நாவல் நகர் பெண்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மலையக இளைஞர் முன்னணியின் தலைவர் திரு.இரா. சிவலிங்கம் பேசுகையில் மலையகப் பெண்களின் கரங்கள் கொழுந்து கொய்யாவிட்டால் இந்தநாட்டின் நிலையே பாழடைந்துபோய்விடும். ஈழத்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான தேயிலைக்கு தெம்பூட்டுபவர்களாக விளங்குபவர்கள் மலையகப் பெண்களேயாகும்."

மற்றும் திரு ஜெயராம், திருமதி காலித் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. சரா இமானுவேல், திருமதி ராஜேஸ்வரி, சண்முகம், திரு. விமல் சொக்கநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். விழாவில் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. செல்வி சரோஜினி ராமையா நன்றியுரை நிகழ்த்தினர்.

## கனடாவில் சமஷ்டி ஆட்சி அமைப்பு வெற்றி

### பிரதமர் ட்ரூடோ கருத்து

கொழும்பு, வியாழன் கனடாவில் சமஷ்டி அமைப்பு சிறப்பாகச் செயற்பட்டு வருகிற தென்றும் அங்கு ஒற்றையாட்சி முறையை அமைக்க முயற்சி செய்தால நாடு பல கூறுகளாகிவிடுமென்றும் கனடாப் பிரதமர் திரு. ட்ரூடோ இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

நான்கு நாள் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம்திரும்புவதற்கு முன்னர் திரு. ட்ரூடோபத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டார்.

கனடாவில் சமஷ்டி அமைப்பு வெற்றிகரமாகச் செயல் படுகிறதாவென்று 'ஈழநாடு' ஆசிரியர் திரு. கே பி ஹரன்கேட்டபோதே கனடாப்பிரதமர் சமஷ்டி அமைப்பு வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்று பதிலளித்தார். திரு. ட்ரூடோ மேலும் பின்வருமாறு கூறினார்.

பல இன, பல மத மக்கள் வாழ்கின்ற கனடாவைப் போன்ற ஒரு நாட்டில் எப்போதும் உள்நாட்டு நெருக்கடி இருக்கத்தான்செய்யும். இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சிஅமைப்புமுறை ஒன்று தான் கனடாவுக்கு உள்ள வழி, ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்த கனடா முயன்றால் நாடு பல கூறுகளாகிவிடும்.

கனடாவில் வேறுவிதமான மனப்போக்குகளுக்கு சமஷ்டி அமைப்பு எந்தவகையில் பொருத்தமாக இருக்குமென்பதைப்பற்றித் தன்னால் திட்டவட்டமாகக் கணிக்க முடியவில்லையென்று மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த கனடாப் பிரதமர் இதுபோன்ற மனப்போக்கு பிரிட்டன் உட்பட வேறு பல நாடுகளிலும்நிலவுகிறதென்றார். பிரிட்டனில் வெல்ஷ் மக்களும் ஸ்கொட்லாந்து மக்களும் விடுதலைகோரிக் கிளர்ச்சி செய்கிறார்களென்றும் தனி அரசுகோரும் தமது நாட்டு மக்களிடம் சந்தைவசதி நிறைந்தபெரிய நாடு பிரிவில்லாமல் ஒன்றாக இருப்பமே அனைவருக்கும் நல்லதென்பதைத்தான் உணர்த்திவருவதாகவும் திரு ட்ரூடோ கூறினார். (சி பி ஏ

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

6 மாபிள்கல்லுமேசைகள், 24 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு வே, ஞானி அச்சுவேலி (விபேர்ட்டி தியேட்டர் முன்) 2450

**காணி:**

பூநகரியிலுள்ள மன்னார் றோட்டில் 3-ம் கட்டையிலுள்ள 3 1/2 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. பெற விரும்புவோர் கிழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். S. கந்தையா, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 2688

### வாடகைக்கு

நல்லூர் கோவிலுக்கு நல்லூர் பயிற்சிக்கல்லூரி, கச்சேரி முதலியனவற்றுக்கு அண்மையில் தனி அறைகள் வாடகைக்கு விடப்படும். தேவைப்படுவோர் No. 24, நல்லூர் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2449

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### திருமண அழைப்பு

**ஜெகதீசன் — கிசாம்பாள்**

எமது புதல்வி கிசாம்பாளுக்கும் கைதடி கோயிலாக்கண்டி திருமதி சிவசுப்பிரமணியத்தின் புதல்வன் ஜெகதீசனுக்கும் (பொறியியலாளர்) 1-2-71 திங்கள் காலை 9-30—11-00க்கு மிடையில் நல்லூர் சிவன் கோவிலில்நடைபெறும் திருமணத்திலும் மாலை 6 மணியிலிருந்து மணமகனில்லத்தில் நடைபெறும் வரவேற்பு பசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். க. சுப்பிரமணியம் தம்பதிகள், 24, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2689

## கார்—லொறி மோதல்

கிளிநொச்சி, வியாழன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி றோட்டில் சென்று கொண்டிருந்த கார் ஒன்றுடன் காரின் பின்னால் வந்துகொண்டிருந்த லொறி மோதியதால் கார் பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்சம்பவம் எழுதுமட்டுவாள் சந்தைக்கண்மையில் நடைபெற்றது. காரில் பிரயாணம் செய்தோர் சிறுகாயத்துக்குள்ளாகினர். விபத்துப் பற்றி பளை பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

### தேவை

ஆசிரியர்கள்:

க. பொ. த (சாதாரண/உயர்தர) பரீட்சைகளுக்கு ரசாயனம், பௌதிகம், உயிரியல், புவியியல், பொருளாதாரம், வர்த்தகம், ஆங்கிலம்கற்பிக்கக்கூடிய அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. விளம்பர இல: 2692 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2692

### கல்வி

வகுப்புகள்

G. C. E. (சாதாரண/உயர்தர) வகுப்புகளுக்குரிய எல்லாப் பாடங்களுக்கும் விசேட வகுப்புகள் 1-2-71 தொடக்கம் நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள கட்டிடத்தில் நடாத்தப்படும். 2691

S. S. C.க்கு இரசாயனமும், கணிதமும், J. S. C க்கு விஞ்ஞானமும் கற்பிக்கப்படும். விபரங்கட்கு: ச. நடராஜா, 20/1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2693

## இந்தியாவின் யு. எஸ். தூதர் கீட்டிங் இலங்கை வருகிறார்

கோட்டை, வியாழன்

இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராக இருக்கும் கென்னத் பி கீட்டிங் இலங்கையில் சில தினங்கள் தனிப்பட்ட முறையில் தங்குவதற்காக நாளை (29ந் திகதி) கொழும்பு வருகிறார். இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஸ்ட்ரான்ஸ் ஹூப் சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயஞ்செய்ததற்குப் பதிலாக திரு கீட்டிங் இலங்கை வருகிறார்.

## பாராட்டுவிழா

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபருக்கும், ஆசிரியருக்கும் சேவைநலம் பாராட்டு விழா நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன

## "ஆக்கமுயற்சியில் இளைஞர்கள்"

வெள்ளவத்தை, வியா

'ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இளைஞர்கள் தமது மத்தியில் நிலவிய சமூகஅநீதிகளை எதிர்த்து வன்மையாகப் போராடியுள்ளனர்' அவர்களுடைய எதிர்ப்புகள் பல உருவங்களை எடுத்துள்ளன. சில வேளைகளில் பலாத்காரத்திற்கும் அழிவிற்கும் வழிவகுத்துள்ளன. நாட்டுப்பற்றுள்ள இளைஞர் குழுவொன்று ஆக்க முயற்சிக்குத் தனது சக்தியை நெறிப்படுத்தும் தீர்மானத்துடன் மன்றம் ஒன்றினை அமைத்திருப்பது ஊக்கமளிக்கின்றது. இவர்தம் முதலாவது நடவடிக்கையாக இந்த நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் கமத்தொழில் கைத்தொழில் வளத்தினை மக்களுக்கு எடுத்துக்காட்டவென யாழ் நகரில் கண்காட்சியை நடாத்தவுள்ளனர்'

இவ்வாறு முன்னாள் நீதியரசர் திரு. வீ. சுப்பிரமணியம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இளந்தமிழர் முன்னேற்ற மன்றத்தினரின் கலைவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு. செ. இரங்கநாதன் கியூ. ஸி. தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரையின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் பின்பு நிழல் நாடக மன்றத்தினரின் 'பச்சைக்கிளியே பழம் கொண்டா' என்ற நாடகமும் இடம்பெற்றன.

### பஸ்நிலையம் விஸ்தரிக்கப்படும்

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சியில்சகலவசதிகளையும் கொண்ட பஸ் டிப்போவொன்றையும், பஸ்நிலையத்தையும் இ. போ. ச. அமைக்கவுள்ளதாகத்தெரியவருகிறது.

தூர இடங்களுக்கான சேவைகளையும் மேற்படி டிப்போவின் பொறுப்பில் விடவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். குறிப்பிட்ட டிப்போ அமைக்கப்படவுள்ளஇடத்தை அடுத்தமாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வரும் இ. போ. ச தலைவர் திரு. அனில்முனசிங்கா பார்வையிடுவார் என்று தெரிகிறது

புதிய நவீன வசதிகள் கொண்ட பஸ்நிலையம் தற்போதுள்ள இடத்திலேயே நிறுவப்படும். அதற்குசமீபத்தில் இ. போ. ச' ஊழியர்க்கான வீடமைப்புத் திட்டமொன்றும்நிறுவப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## 'தென்றல்'

பாலமுனை, வியாழன்

நிந்தாவூர் பூங்கா எழுத்தாளர் மன்றத்தினரின் கன்னி முயற்சியால் உருவாக்கப்பட்ட "தென்றல்" (இலக்கிய மாதகையெழுத்து சஞ்சிகை) எட்டாவது இதழ் நிந்தாவூர் பூங்கா எழுத்தாளர் மன்ற வாசிகசாலை மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.


**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா

நடித்த

**எங்கிருந்தோ வந்தாள்**

**வின்ஸர் யாழ்ப்பாணம்** இன்று மட்டும்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி

நடித்த

**சக்கரம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (கொழும்பு)

சிவாஜி

காஞ்சனு

எம். என். நம்பியார்

நாகேஷ்

முத்துராமன்

இன்னும் பலர் நடித்த





**சிவந்த மண்**

**வெல்லிசினிமா**

காஸிப்பாசி

தினசரி 3 காட்சிகள்

எஸ். எஸ். ஆர். - தேவிகா

நடித்த

**மறக்கமுடியுமா?**

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

காந்தராவ் — ராஜ்ஸ்ரீ

நடித்த

**மன்னனைக் காத்த மாவீரன்**

**RAJAH**

(Jaffna)

Daily at 4-45, 7, 9-45 p.m.

Clint Walker

in

THE GREAT BANK ROBBERY

(colour)

**MANOHARA**

Jaffna

Daily 4-45, 7 & 9-45 p.m

Poya days 4 shows

Christopher Lee

in

THE DEVIL'S BRIDE

(Colour)

**REGAL** Jaffna

Daily 3 shows

Poya days 10-30 a. m.

Peter Sellers, Lee Remick

in

THE PARTY


## திருமண அழைப்பு

**கணேசலிங்கம்-யோகேஸ்வரி**

நிகழும் சாதாரண வருடம் திங்கட்கிழமை 19-ம் திகதி (1-2-71) 9.45 க்கும் 10.45க்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில், குப்பிழான் காலஞ்சென்ற திரு. கந்தையா, திருமதி கந்தையா ஆகியோரின் புதல்வன் கணேசலிங்கம் (மின்பொறியியலாளர், சுன்னாகம்) அவர்களுக்கும், சிறும்பியடி காலஞ்சென்ற திரு. ஐயாத்துரை (இராசையா), திருமதி ஐயாத்துரை ஆகியோரின் புதல்வி யோகேஸ்வரி (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களுக்கும் வண்ணை வெங்கடேசப் பெருமான் கோவிலில் திருமணம் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும் தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டப்படுகின்றனர். 2748


## இப்பொழுது விற்பனையாகிறது

ஈ ழ நா டு

10-வது ஆண்டு நிறைவை யொட்டி நடாத்திய சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளில் பரிசு பெற்றவை நூலுருவில் வெளிவந்துள்ளன.

### கங்குமட்டை

(சிறுகதைத் தொகுதி)

செங்கை ஆழியன் எழுதிய கங்குமட்டை

செம்பியன் செல்வன் எழுதிய பூவும் கனியும்

அப்பச்சி மகாலிங்கம் எழுதிய ஆறுதற்பரிசு

எம். ஏ ரஹ்மான் எழுதிய கிறுகை நீட்டி

மு. கனகராசன் எழுதிய கண்டுவிரல் மெட்டி

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

### விடிய இன்னும் நேரமிருக்கு

(ஓரங்க நாடகங்கள்)

செம்பியன் செல்வன் எழுதிய விடிய இன்னும் நேரமிருக்கு

'யாழினி' எழுதிய தாஜ்மகால்

உடுவை தில்லைநடராசா எழுதிய பூமனர்

மு. கனகராசன் எழுதிய சிலுவையும் குத்துவாளும்

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடம்: ச கிருஷ்ணசாமி; பெரியகடை யாழ்ப்பாணம்

'ஈழநாடு'

த. பெ. எண்: 49 — யாழ்ப்பாணம்

# தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் தேர்தல் கூட்டணி முற்ருக முறிந்தது

## தேசிய மட்டத்தில் கழக ஆதரவு நீடிக்கும்

சென்னை, ஜன. 28

**ஜெகஜீவன்ராம் தலைமை காங்கிரஸ் கட்சிக்கும் தி. மு. கழகக் கூட்டணிக்குமிடையில் நடைபெற்று வந்ததேர்தல் உடன்பாடு சம்பந்தமானபேச்சுக்கள் முற்ருகவே தோல்வியடைந்து விட்டன.**



ஜெகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸ் கட்சிக்கு மேலும் சில தொகுதிகளை ஒதுக்கு வதற்கும் தமது கட்சி போட்டியிடும் தொகுதிகளில் சிலவற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் கூடதாங்கள் தயாராகவிருப்பதாகவும் ஆனல் காங்கிரஸார் இதற்கு சம்மதிக்கவில்லையென்றும் தி: மு. கழகத் தலைவர் திரு. மு. கருணநிதி கூறினர்.

சட்டசபைத் தொகுதிகள் 234-ல் மூன்று நீங்கலாக மற்ற எல்லா தொகுதிகளிலும் தி. மு, கழகக்கூட்டணி போட்டியிடும் என்று அவர் தெரிவித்தார் லோக்சபா தொகுதிகளிலும் 28 இடங்களுக்கு தி. மு. கழகமும் 4 இடங்களுக்கு பாரத கம்யூனிஸ்ட்கட்சியும் முஸ்லிம்லீக் ஓர் இடத்துக்கும் போர்வார்ட்புளக் ஓரிடத்துக்கும் போட்டியிடவிருக்கின்றன. சட்டசபைத் தொகுதிகளில் 198 இடங்களுக்கு தி. மு. கழகமும் 10 இடங்களுக்கு பாரத கம்யூனிஸ்ட் கட்சியும் முஸ்லிம்லீக் 8 இடங்களுக்கும் போர்வார்ட்புளக் 4 இடங்களுக்கும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 4 இடங்களுக்கும் தமிழரசுக் கழகம் இரண்டு இடங்களுக்கும் போட்டியிடவிருக்கின்றன.

தமிழ்நாட்டில் ஜெகஜீவன் ராம்காங்கிரஸுடன் கூட்டுச்சேஇயலாமல் போனலும் மத்தியில் திராவிடமுன்னேற்றக்கழகமும் கூட்டணியினரும் திருமதி இந்திரா காங்கிரஸ்கட்சிக்கு ஆதரவளிக்கும் என்றும் திருமதி காந்தியின் முற்போக்கு கொள்கைகளைத் தாங்கள் தொடர்ந்து ஆதரிக்கப் போவதாகவும் திரு. கருணநிதி தெரிவித்தார்.

### ஜனதிபதி அறிவிப்பு

இந்திய ஆட்சிமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு பொது மக்களைக் கேட்டுக்கொள்ளும் சம்பிரதாய பூர்வமான அறிவிப்பை ஜனதிபதி கிரி விடுத்துள்ளார். இந்தஅறிவிப்பைத் தொடர்ந்து தேர்தல் காலம் ஆரம்பமாகின்றது. தமிழ் நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங்கும் சட்ட சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி தமிழ் நாட்டு மக்களுக்கு அறிவிப்பு விடுத்திருக்கிருர்.

### புதிய முறையில் எண்ணுவர்

இந்தியத்தேர்தலில் இம்முறை வாக்குச் சீட்டுக்களை எண்ணுவதில் புதிய முறையொன்று புகுத்தப்படவிருக்கின்றது.

இதுவரை காலமும் வாக்குச் சாவடிகள் வாரியாக வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்டு வந்தன. இனிமேல் தொகுதி வாரியாக வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படவிருக்கின்றன.

### தேர்தல் சின்னப் பிரச்னை

பசுவும் கன்றும் தேர்தல் சின்னமாக ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து ஏதாவது பரிசிலனை செய்யப்படுமானல் தங்களுக்குத் தெரிவிக்காமல்எதுவும்செய்யப்படக்கூடாதென்று ஜெகஜீவன் ராம் தலைமைக்காங்கிரஸ் கட்சியினர் சுப்ரீம் கோர்ட்டில் மனுவொன்றைத்தாக்கல் செய்துள்ளனர்.

பசுவும் கன்றும் தேர்தல் சின்னமாக ஒதுககப்பட்டுள்ளது குறித்து நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ்கட்சி ஏற்கனவே தேர்தல்கமிஷ



னிடம் ஆட்சேபனையொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றது.

ஜனசங்கக் கட்சியும் ஆட்சேபமனுவொன்றினைத் தாக்கல் செய்திருக்கின்றது. பசு இந்துசமயத்தின் புனித சின்னங்களில் ஒன்ருகவிருப்பதாலும் வழிபாட்டுக்குரியதாகவிருப்பதாலும் வாக்காளர்மத்தியில் குழப்பமான கருத்து ஏற்படலாம் என்று ஜனசங்கம் ஆட்சேபித்திருக்கின்றது.

### கரியப்பா போட்டி

முன்னள் இந்திய ராணுவத்தளபதி கரியப்பா பம்பாயில் சுயேட்சையாக இத்தேர்தலில் போட்டியிடவிருக்கிருர்.

———

### காலமானர்

பேர்லின், ஜன. 28

ஜெர்மன் ஜனநாயக குடியரசின் தேசியசபையின் உபதலைவர் திரு. மாற்றன் காலமாகிவிட்டார்.

—

### மிளகாய் விருத்திக்கு ஆதரவு

கிளிநொச்சி, வியாழன்

அரசாங்க விவசாயப் பகுதியினர் யாழ் மாவட்டத்தில் புதிய முறையில் மிளகாய்ச் செய்கையை விருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளனர். தற்போதுபுகையிலைப் பயிர் விளைவிக்கப்பட்டுள்ள நிலங்களில் புகையிலைச் சாகுபடி முடிந்ததும் மிளகாய்ப் பயிர் செய்கைபண்ணப்படவிருப்பதே இப்புதிய திட்டமாகும். அடுத்த மார்ச் மாதத்துடன் புகையிலைச் சாகுபடி முடிந்ததும் ஏப்ரல் மாதமுற்பகுதியில் 'சந்தைக்காய் மிளகாய்' விளைச்சலை உண்டுபண்ணுமாறு விவசாயிகளுக்கு வவசாயப் பகுதியினர் ஆலோசனைகளைக்கூறுவர். குறிப்பிட்ட திட்டத்தின்படிவடபகுதியில் சுமார் 4 000 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய்ப் பயிர் பயிரிடப்படலாமென்றும் 3 மாத காலப் பயிரான மேற்படி மிளகாய்ச்செடிகள் நிறைந்த மகசூலைத் தருமென்றும் விவசாயப் பகுதி உயர் அதிகாரி தெரிவித்தார்.

புதிய முறையிலான இம் மிளகாய்ப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கும் விவசாயிகளுக்கு நாற்றுகள் விதைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுமாம் இப் பயிர்ச்செய்கை பற்றிய பிரசாரத்தை வடக்கிலுள்ள சகல விவசாயப் பிரிவுகளிலும் அடுத்தமாதம் விவசாயப்பகுதியினர் ஆரம்பிப்பர்

---

### மேற்கு ஆபிரிக்காவில்

## வாக்கெடுப்பு நடத்த தென் ஆபிரிக்கா தயாராம்

ஹேக். ஜன 28

மேற்குஆபிரிக்காவிலுள்ள தனது காலனிகளில் பொது வாக்கெடுப்பு நடத்தத் தயாராய் இருப்பதாக தென்னபிரிக்க அரசாங்கம் உலக நீதிமன்றத்திடம் தெரிவித்திருக்கின்றது.

மேற்கு ஆபிரிக்காவிலிருக்கும் காலனிகளைவிட்டு தென்னுபிரிக்கா வெளியேறவேண்டும் என்று ஐ நா. விடுத்த உத்தரவை தென்னுபிரிக்கா அமுல் செய்யாதது குறித்து ஹேக்கில் உள்ள உலக நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுவருகின்றது இந்த விசாரணைகளின் போது தென்னுபிரிக்கா பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்தத் தயாராய் இருப்பது பற்றித் தெரிவித்தது.

மேற்கு ஆபிரிக்க காலனிகளில் வாழும்மக்களில் அரைவாசிப் பேர் தென்னுபிரிக்க ஆதிக்கத்தின் கீழ் இருக்க விரும்புவதிளுலேயே தென்னுபிரிக்கா இவ்வாறு வாக்கெடுப்பு நடத்த முன்வந்ததாகக் கூறப்படுகின்றது.

---

### சேவைக்குப் பாராட்டு

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் கிராமசேவையாளராக கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்ட திரு மு. தர்மதாசன் சேவையைப் பாராட்டி தொல்புரம் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் நடாத்திய வைபவம் தொல்புரம்பாணவெட்டி மாண முதலியார் மடத்தில் சங்கத் தலைவர் திரு ஆ. வைத்திலிங்கம் தலைமையில்நடந்தது கிராம சேவையாளர் மு. தர்மதாசனின் சேவையைப்பாராட்டி இளைப்பாறிய விதானையார் சி. கந்தையா, சுழிபுரம் கிராமசபைத் தலைவர் சு. கந்தசுவாமி எஸ். தியாகராசா, ஜே. எப். மயில்வாகனம் ஜே. பி. யாழ் நூலக உதவிப் பொறுப்பாளர் சன் கந்தையா ஆகியோர் பேசினர். திரு தர்மதாசன் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர் புலவர் நா. சிவபாதசுந்தரன் நன்றியுரை கூறினர்.

— —

### கிராமமுன்னேற்ற சங்க தீர்மானம்

பருத்தித்துறை, வெள்ளி

கட்டைவேலி — துன்னலை தெற்குக் கிராமமுன்னேற்றச்சங்கக் கூட்டம் தலைவர் திரு சி வி பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

கோவிற் சந்தை வரையுள்ள மின்சார சேவையை கலிகைச் சந்திவரை நீடிப்பது. ஐந்நூறு யார் தூரத்துக்கொரு நீர்க்குழாய்கள் அமைப்பது என்றும் சந்திகளில் நீர்க்குழாய்கள் அவசியம் அமைப்பது என்றும் நுணவில் பகுதியில் உள்ள சைவ ஆலயத்திற்கும் கிறிஸ்தவ கோயிலுக்கும் போகும் பாதை உடனடியாக உயர்த்தப்பட்டுச் சீர்திருத்தப்படல் வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானங்களின் பிரதிகள் நெல்லியடி பட்டினசபைக்கும் கட்டைவேலிக் கிராமச்சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

---

### விவசாயப்படைச் சங்கம் தீர்மானம்

மாவிட்டபுரம். வியா.

பதவி இழந்த விவசாயப் படைவீரர்களைக் கொண்ட "சமஸ்தலங்கா கொவிக முதா சங்கமய" வடபிரதேசக்கிளையின் விசேடகூட்டம் சங்கத்தலைவர் திரு. என். விசுவநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

3 அரை வருடங்கள் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் கீழ் இலங்கை விவசாயப்படை இயங்கிவந்தது. தொழிற்சட்டத்தின் படி 6 மாதகாலம் சேவையாற்றியவர்களை வேலைநீக்கம் செய்ய முடியாது. 6மாதத்திற்கு மேல் தொடர்ந்து வேலைசெய்யும் தொழிலாளர் நிரந்தரமாக்கப்பட வேண்டும். இல்லையேல் 6 மாதத்திற்கு ஒரு முறை வேலைநீக்க அறிவித்தல் கிடைத்து பின் சேவை நீடிக்கப்பட வேண்டும் தொழிற்சட்டத்துக்கு முரணக மூன்றரை வருடங்கள் நீர்ப்பாசன அமைச்சின் 'செக்ரோல்' பட்டியலின் கீழ் வேலை செய்தவிவசாயப் படைவீரர்கள் ஒருமாத கால சம்பளலீவுடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் இவர்களை சட்டப்படி வேலையிழந்தவர்களாகக்கருதமுடியாது, எனவே மாஜி விவசாயப்படை வீரர்களின் துயரை நீக்கும்படி அரசாங்கத்தைக் கோருகிருேம்,

இவ்விஷயத்தில் தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் உதவியையும் நாடி, அவர்களின் அபிப்பிராயங்களையும் பெற்று அமைச்சுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

— —

### மைதானம் வேண்டும்

கிளிநொச்சி. வியா.

கிளிநொச்சியில் சகல வசதிகளையும் கொண்டவிளையாட்டரங்கொன்றை அமைத்துத்தருமாறு இங்குள்ளவிளையாட்டுக் கழகங்கள விளையாட்டமைச்சர் திரு.கே. பி. இரத்நாயக்காவிடம் கேட்கவுள்ளன.

ஞெரூட்றிக்கோ மைதானம் நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமானதால் எவ்வித சீர்திருத்தங்களையும் செய்ய முடியவில்லையென்பதையும் இவர்கள் சுட்டிக்காட்டவுள்ளனர்.

---

### உகண்டாவில்

## தேர்தல் நடக்கும் வரை ஜனதிபதி கிடையாது

### ராணுவத் தளபதி அறிவிப்பு

கம்பாலா ஜன. 28

உகண்டாவின்புதிய ஆட்சியின் கொள்கைகள் பற்றி மேஜர் ஜெனரல் அமீன் விளக்கியிருக்கிருர்.

காமன்வெல்த்கூட்டமைப்பிலிருந்து உகண்டா விலகாது. பிரிட்டனுடன் நட்புறவுடனேயே இருக்கும்என்று அவர் கூறினர்.

கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டுவீர்களா என்று கேட்டபோது எல்லா நாடுகளுடனும் தாங்கள்நட்புடனேயே இருக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

புதிய தேர்தல் நடைபெற்று ஜனதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுமவரை ஜனதிபதி ஒருவர் நாட்டில் இருக்க மாட்டார் என்றும் அவர் தெரிவித்தார்

தான்சானிய படைகள் உகண்டாவை நோக்கி புறப்பட்டிருப்பதாக மேஜர் ஜெனரல் அமீன் முன்னர் கூறியது பற்றிகேட்டபோது வதந்திகளை அடிப்படையாக வைத்து இக் கருத்துக் கூறப்பட்டதாக அவர் கூறினர்.

இதே சமயம்தான்சானிய அதிபர் நியாரரே தார்எஸ்-சலாம் திரும்பியவுடன் தற்பொழுதுஅங்கிருக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்ட உகண்டா ஜனதிபதி ஒபட்டேயைச் சந்தித்து உகண்டாப் பிரச்னைகள் பற்றி ஆலோசனை நடத்திஞர். ஒபட்டே தற்பொழுதுதான்சானியாவில் அடைக்கலம் கோரி அங்கு வந்திருக்கிருர்

மணிவாசகம்

உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. மனமும் சுத்தமாக இருக்கவேண்டும், சுத்தமான உணவை நாம் உண்போமானால் அது மனச் சுத்தத்திற்கு வழிவகுக்கும் — சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

Eelanadu Ltd., Jaffna Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna Telephone: 889

பல்லவ வருடம் சாதாரண வருஷம் தை மாதம் 16-ம் திகதி (29-1-71)


## ஏகபோகம்

வர்த்தகத்தில் அன்னியரின் ஏகபோகத்தை முறியடித்தாலன்றி உண்மையான பொருளாதார சுதந்திரத்தை அடைய முடியாதென்றும் இந்தக் கடமையான பணியை அரசாங்கம் நிறைவேற்றுமென்றும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கொலன்னுவையில் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். வர்த்தகத்தில் மட்டுமல்ல எந்தத் துறையிலுமே ஏகபோகம் ஒழித்துக்கட்டப்படவேண்டும். இதையே மக்களும் விரும்புகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள்.

வெளிநாட்டவர்கள் நமது நாட்டின் பணத்தைச் சுரண்டிக்கொண்டு போக அனுமதிக்கக்கூடாது. வர்த்தகத் துறையில் மட்டுமல்ல எந்தத் துறையிலுமே இதற்கு இடம் கொடுக்கக்கூடாது இந்த வகையில் இலங்கையர் மயத் திட்டத்தை மக்கள் வரவேற்பர்.

ஆனால் வெளிநாட்டவர்கள் வர்த்தகத்தில் செலுத்திய அதே ஏகபோக உரிமையை உள்நாட்டவருக்குக் கொடுத்துவிடுவதால் பொருளாதார விடுதலை கிடைத்துவிடுமா? எந்தத்துறையில் ஒருவர் ஏகபோகம் செலுத்தினாலும் அதை முறியடித்து மக்கள் சமமாக அனுபவிக்க வழிவகுக்க வேண்டுமேயொழிய ஒருவரிடமுள்ளதைப் பறித்து இன்னொருவர் அதே ஏகபோகம் செலுத்துவதற்கு அனுமதியளிப்பது சோஷலிஸமாகாது. அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் விலைவாசி உயர்வதற்கும் வெளிநாட்டு வர்த்தகர்கள் மட்டும்தான் காரணமல்ல; உள்நாட்டு வர்த்தகர்களுக்கும் இதில் பங்கில்லாமலில்லை.

வெங்காயம், செத்தல் மிளகாய் போன்ற பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்து அதன் மூலம் நம் நாட்டின் விவசாயத்தை இந்திய வர்த்தகர்கள் பாதிக்கச்செய்திருக்கிறார்கள் என்றும் அமைச்சர் இலங்கரத்தின கூறியிருக்கிறார்.

இப் பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்காமல் வர்த்தகர்கள் இறக்குமதி செய்யமுடியுமா? இதற்கு அனுமதி கொடுத்த அரசாங்கம் தவறுசெய்திருக்க இந்தியவர்த்தகர்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டுக் கூறியிருப்பது சரியாகத் தோன்றவில்லை. இப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை ரத்துச்செய்துவிட்டு இப் பொருள்களை அரசாங்கமே இறக்குமதி செய்யலாம்.

அரசாங்கத்துறை, கூட்டுறவுத்துறை, தனியார்துறை என மூன்று துறைகள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்றன கூட்டுறவுத்துறை புனரமைப்புச் செய்யப்படுகிறது, இப் புனரமைப்புத் திட்டமும் கூட்டுறவுத் துறையை அரசாங்க துறையாக்கவே வழிசெய்வதாகத் தோன்றுகிறது. தனியார் துறையின் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கிறது.

தனியார்துறையைப் பொறுத்தவரையில் இரண்டுங்கெட்ட நிச்சயமற்ற நிலை நீடிப்பது நாட்டுக்கோ மக்களுக்கோ நல்லதல்ல.

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி முழுவதையும் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் அல்லது கூட்டுறவுத்துறையிடம் இப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இதன் மூலம் தனியார்துறை ஏகபோகத்தை முறியடிக்கலாம்.

## 'சமூகசேவை நிறுவனங்கள் சிக்கனத்தை உணர்த்தவேண்டும்'

களனி, வியாழன்

சாதாரண, எளிய, சிக்கனமான முறையில் திருமண வைபவங்கள் மரணச் சடங்குகள் மற்றும் விழாக்கள் ஆகியவற்றை நடாத்துவதற்குப் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்க தற்போதைய சூழ்நிலை சமூகசேவை நிறுவனங்களுக்கும் மற்றும்ஸ்தாபனங்களுக்கும் வாய்ப்பானதொன்றாகும்.

ராஜகிரியாவிலுள்ள கலபலுவா சமூகசேவை சங்கத்தின 9வது வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பீ. இலங்கரத்தின மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தற்போது பெருந்தொகையான மக்கள் பொருளாதார கஷ்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் கஷ்டப்படுவதையும் பொருட்படுத்தாது வசதியுள்ளவர்களைப் பார்த்து தாங்களும் சடங்குகளை உடன்பட்டும் ஆடம்பரமாகச் செய்கிறார்கள். இந்த நிலை மாறி சகல... எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதற்குச் சமூகநல நிறுவனங்கள் மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வு நிகழ்ச்சிகளைப் போக்கத்தக்க வகையில் போதிக்க வேண்டும் தனிப்பட்ட ஒவ்வொருவரும் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவர்கள் உழைத்தவர்கள் ஆகிறார்கள்.

டாக்டர் சதாமங்கள கருணாரத்ன, வண. கொட்டிகாவத்தை சத்த தீஸ நாயக்கதேரோ உட்படப் பலர் இவ் வைபவத்தில் உரையாற்றினர்.

— —

## ரூ. 4000 செலவில் பொதுச்சந்தை

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சி பட்டினசபையினர் பரந்தனில் பொதுச் சந்தை ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளனர் இச் சந்தைக் கட்டடத்துக்கான வேலைப்பத்திரங்கள் விரைவில் கோரப்படும்

# பல்கலைக்கழக பிரவே...
# தமிழ் மாணவர் புறக்க...

பல்கலைக்கழகத்துக்கு மாணவர் அனுமதி குறித்து கடந்தாண்டு 10ம் திகதி யாழ்ப்பாண மகாநாடு ஆராய்ந்து பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருந்தது. அந்த மகஜர் கல்வியமைச்சரின கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகப் பிரதமர் பதிலனுப்பியிருந்தார் யாழ்ப்பாண மகாநாட்டு அங்கத்தவர்கள் மேற்படி மகஜரில் உள்ள இரு முக்கிய விஷயங்களைச் சுட்டிக்காட்டி மேலும் இப்பிரச்சினை குறித்து அதற்குத் தீர்வுகாண வேண்டுமெனக் கோரி எழுதிய கடிதத்தின் முதற்பகுதி நேற்றுப் பிரசுரமானது. இன்று அதன் இறுதிப்பகுதி இங்கு தரப்படுகிறது.

அடுத்து பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி போதிப்பது பற்றிய அரசாங்க அறிக்கையின் குறிப்புகளை நோக்குவோம். சிங்களமொழி மூலம் விஞ்ஞானம்போதிக்க ஆசிரியர்கள் இல்லையென்ற குறையைவைத்துக்கொண்டு ஆற்றல் மிக்க தமிழ் மாணவர்களை புறக்கணித்து தரக்குறைவான சிங்கள மாணவர்களைப்பொறியியல் வைத்தியப் பிரிவுகளுக்குள் திணித்துள்ளார்கள் என்பதை நாம் அறியத் தவறிவிட்டோம். அடுத்து மேற்படி அறிக்கையில்தமிழ் மொழி மூலம்விஞ்ஞானம் கற்பிக்கும ஆசிரியர்கள் பெருந்தொகையாக உள்ளனர் எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பொய்யான செய்தியாகும், உண்மை என்னவெனில் யாழ்குடாநாட்டில் (1967ம் ஆண்டின் அதிகார பூர்வமான அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு) 'ஜீ. சி. ஈ. சாதாரண வகுப்பிலும் அதன் கீழ் வகுப்புகளிலும் விஞ்ஞானம் போதிப்பதற்கு பயன்படுத்தத்தக்க ஆசிரியர்கள் போதியளவு உள்ளனர். இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் பெற்றோர்களுக்கு இது ஆறுதல் அளிக்கத் தக்கதொன்றல்ல நாட்டின் ஏனையபகுதிகளில் விஞ்ஞான ஆசிரியர்களும் விஞ்ஞான ஆய்வு கூடங்களும் மிகக் குறைவாகவேயுள்ளன இதனால் இப் பாடசாலைகளில் உள்ள தமிழ்ப் பிரிவு உயர் வகுப்புகள் மட்டுமின்றி கீழ் வகுப்புகளும் மூடப்பட்டுள்ளன, மேற்படி அறிக்கையின்படி அநேகமான கல்விப் பிரதேசங்களில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் தமிழ்மூலம் போதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை, ஒரு பகுதியினரிடையே கல்வியை வளர்ப்பதற்காக மற்றொரு பகுதியாரின் கல்வியைத் தாழ்த்துவது தேசாபிமானமற்றதொரு செயலாகும். அத்துடன் இத்தகையதொரு செயல் நினைத்துப் பார்க்க முடியாததொன்றாகும். இதனால்சர்வதேச கல்விநிலைமைகளோடு நமது நாட்டுக்கல்வியையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது உயர்வகுப்புகளின் எமது நாட்டுக் கல்வித்தரம் தரக்குறைவாக அதாவது 2-ம் தரமாகவே இருக்கிறது.

ஜி. சி, ஈ உயர்தரத்தில் கல்வி மிகத் தரம் குறைவாகக் காணப்படுகிறது.

மொழிகள் விடயத்தில் உயர் விஞ்ஞானம் பற்றி ஆராய்ச்சி செய்து உயர்விஞ்ஞானக் கல்வி கற்பவர்கள் தற்கால மொழிகளில் மூன்றைக் கற்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது, பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் விஞ்ஞானக் கல்வி பயில்பவர்கள் ஆங்கில மொழியைக் கற்றிருக்க வேண்டும், 3 மொழி கற்பவர்கள் சிலரே நம் மத்தியில் உள்ளனர்; பல்கலைக் கழகத்திலும்இரண்டாந்தரப் பாடசாலைகளிலும் அநேகமானவர்கள் எமது கலை கலாச்சாரம் முதலியவற்றைப் பற்றியறிய இயலாதவர்களாகவிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியின்றி இருப்பதே என்பதை நாம் உணரவில்லை,

கிராமப்புறங்கள் பற்றி அரசாங்கம் கவலையெடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம், ஆனால் பல்கலைக்கழக அனுமதி எந்தப் பகுதிக்கும் சலுகை காட்டுவதாக அமையவேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை, நகரத்தில் பிறப்பதால் வாய்ப்பை இழப்பதாகவோ அல்லது சோஷலிச இலங்கையில் கல்வி பெறுவதை மறுப்பதாகவோ இருக்கக் கூடாது. அறிக்கையில் குறிப்பிட்டபடி பல்கலைக்கழக அனுமதியின் அடிப்படை எந்தப் பிரிவுக்கும் நன்மை பயப்பதாக அமைந்ததா?

நகர, கிராமப் பகுதிகளுக்கென வேறுவேறான கூட்டுத்தொகைகள் கணிக்கப்படவில்லை. தனித்தனியே ஒவ்வொரு பாடசாலை பல்கலைக்கழக அனுமதிப் பட்டியல்களையும் நோக்கினால் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட சிங்கள மாணவர்கள் யாவரும் கொழும்பு நகரத்திலும் மற்றும் நகரங்களிலும் இருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுஉறுதியாகும். ஆனால் வருங்காலத்தில் பொறியியலாளர்களாக வேண்டிய தமிழ் மாணவர்கள் யாவரும் கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து வந்தவர்களேயாவர், ஆனால் உண்மையான வருத்தத்தை தரக்கூடிய செய்தி யென்னவெனில் இந் நாட்டிலுள்ள தகுதியுள்ள மாணவர்களிற் பெரும்பான்மையோர் தங்களது தகுதிக்கேற்ற கல்வியைப்பெறுவதில்லை. இதற்குகல்வித்துறையிலும் சமூக பொருளாதார அபிவிருத்தியிலும் காணப்படும் பிரதேசசமத்துவமின்மையை குறிப்பாக காலனி ஆட்சிக்காலத்தில் நிலவிய நிலைமையை குறைக்கவேண்டுமென்பது நீண்டகாலமாகக் கூறப்பட்டுவரும் விடையாகும் இந்த விடையையே 1917-ம் ஆண்டுருஷ்யப்புரட்சிக்குப் பின்னர் லெனின் கூறினார். இதைக் கூறியதோடு சோவியத்யூனியன் முழுவதிலும் கல்லூரிகளை நிறுவினார். குறிப்பாக குடியரசின் ஒவ்வொரு பிரதேசத்திலும் உயர்கல்விக்கான நிறுவனம் ஒன்றையாவது நிறுவினார்.

பிரதமமந்திரி கல்வியமைச்சர், மற்றும் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் யாவரும் தமிழ்மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியையிட்டு அடைந்துள்ள ஏமாற்றம் வெறுப்பு ஆகியவற்றை தற்போது உணர்ந்திருப்பார்கள் இதைவிட இவர்கள் மாணவர்களின் வகுப்பு வேலைகளைப்பரிசோதிக்கும் பட்சத்தில் நடைபெறும் பரீட்சைகளும் எங்கும் ஒரேமாதிரியானதாக நடைபெறுவதில்லை என்பதை அறியவேண்டும் இவற்றையெல்லாம் நோக்குமிடத்து இளைஞர்களின்காலடியில் அவர்களுக்குகுழிதோண்டப்பட்டிருப்பதை இளைஞர்கள் அறிவார்கள். மற்றுமொரு கோணத்திலிருந்து நோக்குமிடத்து இதனால் தேசிய அபிவிருத்தி எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதைக் கணிக்கமுடியாது. இங்கு மறுபடியும் ராதாகிருஷ்ணன் அறிக்கை குறிப்பிடுவதை நோக்குதல் நன்று ''பிராமணர்களாக அல்லது பிராமணர்கள் இல்லாதவர்களாகஇருந்தாலும் சரி முஸ்லீம் ஆகவிருந்தாலும் சரி அல்லது கிறிஸ்தவர்களாகவிருந்தாலும் சரி நாட்டின் அறிவு பெற்றவர்களது சுய அபிவிருத்திக்கு தடைவிதித்தல் அவர்களுக்கு இழைக்கும் அநீதிமட்டுமல்ல தேசத்துக்கே இழைக்கும் அநீதியாகும். நாட்டில் நலன்கருதியும் மனிதஇனத்தின்நன்மைகருதியும் இந்நாட்டுத் தலைவர்களும், கல்விமான்களும் இளைஞர்களுக்கு அவர்கள் தங்களுக்குத் தேவையான உயர்ந்த அறிவைப்பெற உதவிசெய்யவேண்டும்

கே. நேசையா

அடுத்து நாட்டிற்கு அருங்கொடையாக விளங்கும் இளைஞர்களது கல்விகற்கும் காலம் வீணாவதையிட்டு நாங்கள் மிகவும் கவலைப்படுகிறோம். பல்கலைக்கழகத்துக்கு புதிதாக அனுமதிக்கப்படுவதாலும், பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கத் தாமதிப்பதாலும் மாணவரது கல்விகற்கும்காலம்வீணாகிறது. தாமதமாகப் பல்கலைக்கழகம் திறக்கப்படுவதால் 15,000 மாணவர்கள் மாதக்கணக்காக கல்விபெற இயலாது இருக்கிறார்கள். அடுத்து பாடங்கள் ஆரம்பிப்பதற்குத் தாமதம் ஏற்படுவதால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நஷ்டமடைகிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளால் எதிர்காலத்தின் நலனும் நாட்டின் ஒற்றுமையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இவ்வருடம் பல்கலைக்கழகக் கல்விக்கான மாணவர் தெரி

ஆசிரியருக்கு கடிதம்

## யாழ். திறந்... நடராஜருக்...

யாழ். திறந்தவெளி...
க்கு முப்பதில் நட...
சிலை அமைத்திருப்ப...
எதிர்ப்புத் தெரிவித்து...
அரசவைக் கிறிஸ்தவ...
சத்தவர் ஒருவர் பிரே...
கொண்டுவந்திருப்ப...
வெளிவந்த செய்தி...
வாகத் தமிழ்மக்க...
குறிப்பாக இந்து (...
மக்களுக்கும் கவலை...
தாகும். அந்நியர்...
யில் தமிழ், சிங்கள...
சாரம் அழிக்கப்பட்டு...
நிய மொழி, மதம்,...
சாரம் திணிக்கப்ப...
யாவரும் அறிந்ததே...
திரம் அடைந்ததும்...
ங்கை மக்கள் தமிழ், ...
கலாசா...தைப் ...
ரளித்துப் பேணி வ...
முயற்சிப்பது இயற்...
சிங்களக் கலாசா...
பௌத்த கலாசா...
இருப்பதுபோல் ...
கலாசாரம் இந்து (...
கலாசாரம் என்பதை...
ரும் மறுக்கமுடியாது...
ள மக்கள் எதைச்...
தாலும் பௌத்த க...
ரம் பிரதிபலிக்கவே...
கிறார்கள். பரிசுத்த...
பாண்டவர் வருகை...
போது பௌத்த ...
போன்று பிரார்த்தனை...
டபம் அமைத்தனர்....
நாட்டுத் தலைவர்கள்...
போது கண்டி தந்தமா...
யில் வணங்கி, மகா...
காவின் ஆசீர்வாதம்...
செய்கின்றனர். இவை...
சிங்களக் கிறிஸ்த...
எதிர்ப்...டையாது...
தமிழ்மக்கள் தங்கள்...
சாரத்தைப் பேணி வ...
முற்பட்டால் சிறுபா...
தமிழ்க் கிறிஸ்த...
சிலர் எதிர்ப்பது சர்...
ரணமாய்விட்டது. இ...
ரின் குறுகிய மன...
மையையும், தமிழ்...
களின் அலட்சிய மன...
மையையும், பெலவீ...
யும் குறிக்கிறது
நிற்க, நடராஜர்...
இந்திய கலாசாரத்...
ரம் என உலகம் ...
கிறது. அது இந்தி...
யின் உச்சநிலை. மே...
டறிஞர்களும், ...
ஆனந்த குமார...
போன்ற ...மேதை...
நடராஜர் உருவில்...
அழகையும், உன்ன...
வத்தையும் போ...
புகழ்ந்திருக்கிற...
ஆகவே இறந்...

விக்கையாளப்பட்ட...
யால் பொதுப்ப...
மூலம் தகுதியடிப்ப...
தெரிவு செய்தல் ...
பட்டுள்ளன. ...
பட்டுள்ள நிலை...
எமது ஜனநாயகத்...
வாற்றில் ஏற்ப...
பயங்கரமான பிர...
என்று கூறின் மி...
கூறியதாகாது. இப்...
கு உடனடியாக...
மானதொரு ...
கௌரவ பிரதமர்...
வர் என நாடு எதி...
கிறது. இத்தகைய...
டித் தீர்வு இந்...
இளம் பிரஜைகளி...
ளத்தில் தேசிய ...
கோட்பாடுகளை ...
யும.

(...

# ...வேசத்தில் ...ர்க்கணிப்பு

...வருக்கு கடிதம்

## ...ழ். திறந்தவெளி அரங்கு ...ராஜருக்கு எதிர்ப்பு ஏன்?

...ழ். திறந்தவெளி அர... முப்பில் நடராஜர் ... அமைத்திருப்பதற்கு ...புத் தெரிவித்து மாத ...பக் கிறிஸ்தவ அங் ...ர் ஒருவர் பிரேரணை ...டுவந்திருப்பதாக ...வந்த செய்தி போது ... தமிழ்மக்களுக்கும் ...ாக இந்த (சைவ) ...க்கும் கவலை அளிப்ப... . அந்நியர் ஆட்சி ...தமிழ், சிங்களக் கலா ... அழிக்கப்பட்டு அந் ...மொழி, மதம், கலா ... திணிக்கப்பட்டது ...ம் அறிந்ததே. சுதந் ... அடைந்ததும் இல ...மக்கள் தமிழ், சிங்கள ... ...தைப் ... ...ப் பேணி வளர்க்க ...ிப்பது இயற்கையே. ... கலாசாரம் ...த்த கலாசாரமாய் ...துபோல் தமிழ்க் ...ரம் இந்த (சைவ) ...ரம் என்பதை எவ ...றுக்கமுடியாது. சிங் ...க்கள் எதைச் செய் ... பௌத்த கலாசா ...ிரதிபலிக்கவே செய் ...ன். பரிசுத்த பாப் ...வர் வருகை தந்த ... பௌத்த கோயில் ...ு பிரார்த்தனை மண் ... அமைத்தனர். பிற ...த் தலைவர்கள் வரும் ... கண்டி தந்தமாளிகை ...ணங்கி, மகாநாயக் ... ஆசிர்வாதம் பெறச் ...ன்றனர். இவைகளைச் ... கிறிஸ்தவர்கள் ...டையாது... ...மக்கள் தங்கள் கலா ...தைப் பேணி வளர்க்க ...ட்டால் சிறுபான்மைத் ... கிறிஸ்தவர்கள் ...எதிர்ப்பது சர்வசாதா ...ாய்விட்டது. இது சில ...குறுகிய மனப்பான் ...யையும், தமிழ் இந்துக் ... அலட்சிய மனப்பான் ...மையும், பலயீனத்தைத் ...குறிக்கிறது.

..., நடராஜர் உருவம் ... கலாசாரத்தின் சிக ...ான உலகம் போற்று ... அது இந்தியக் கலை ... உச்சநிலை. மேலைநாட் ...ளர்களும், கலாநிதி ...த குமாரசாமி ...ற ...லாமேதைகளும் ...ஜர் உருவின் கலை ...கயும், உன்னத தத்து ...த்தையும் போற்றிப் ...த்திருக்கின்றனர். ...வ திறந்தவெளி அரங்கு நடராஜர் உருவத்தைத் தமிழ்க் கலையின் பிரதிபலிப்பாக பார்க்கவேண்டுமேயொழிய, சைவக் கோயிலாக, பகுத்தறிவுள்ள எவரும் பார்க்கமாட்டார்கள். யாரும் இதுவரை அதைச் சைவக்கோயிலாக நின்று வணங்கியதை யான் காணவில்லை; கேள்விப்பட்டதுமில்லை.

அண்மையில் சிலர், பொது நூலகத்தின் முன் வைக்கப்பட்ட சரஸ்வதி சிலையின் இரு கைகளையும் வெட்டச் செய்து கலைக்கொலை செய்தார்கள். மறுபடியும் கலைக் கொலையிலும், தமிழ்க் கலாசார மறுமலர்ச்சி எதிர்ப்பிலும் ஈடுபடவேண்டாம் என்று இப்பிரேரணையைக் கொண்டுவந்த அங்கத்தவரையும், அவர் போன்று சிந்திப்பவர்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சதா. ஸ்ரீநிவாசன்

உடுவில்

...கையாளப்பட்ட முறை ... பொதுப்பரீட்சை ... தகுதியடிப்படையில் ...வு செய்தல் கைவிடப் ...ள்ளன. ...ற்றும் ஏற் ...ள்ள நிலைமைகளை ... ஜனநாயகத்தின் வர ...ில் ஏற்பட்டுள்ள ...ரமான பிரச்னைகள் ... கூறின் மிகைபடக் ...ாகாது. இப்பிரச்னை ... உடனடியாக நியாய ...ன தொரு தீர்வை ...ரவ பிரதமர் அவர்... ...ான நாடு எதிர்பார்க் .... இத்தகைய உடன ... தீர்வு இந்நாட்டின் ... பிரஜைகளின் உள் ...ல் தேசிய ஜனநாயக ...ட்பாடுகளை எழச்செய்

(முற்றும்)

## கொட்டாஞ்சேனை கள்ளுக்கடைகள் மூடப்படும்

கொட்டாஞ்சேனை, வியா

கொட்டாஞ்சேனையில் உள்ள இரண்டு கல்லுத்தவறணைகள் விரைவில் மூடப்படவிருக்கின்றன. கொழும்பு அரசாங்க அதிபர் இதற்கான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார். வருகிற அக்டோபர் மாதம் முதல் திகதியிலிருந்து இது மூடப்படும்.

கடந்த வாரம் இது மூடப்படுவது சம்பந்தமாக கொட்டாஞ்சேனை வட்டாரத்தில் நடைபெற்ற தேர்தலில் வரியிறுப்பாளர்கள் இவற்றை மூடிவிடும்படியே தீர்ப்புக் கூறியுள்ளதால் இவ்வித திடீர்முடிவுஎடுக்கப்பட்டுள்ளது. 1468 வாக்குகளில் 1365 வாக்குகள் கள்ளுக்கடையை மூடிவிடுவதற்கு விருப்பம் தெரிவித்து கிடைத்திருந்தன,

இவ்விரு தவறணைகளும் வருடாவருடம் அரசாங்கத்துக்கு 140,000 ரூபாவை வரியாகச் செலுத்திவந்தன.

கொட்டாஞ்சேனை வட்டாரவரியிறுப்பாளர்களினதும் இவ்வட்டாரப் பிரதிநிதி திரு. ஹறிஸ் விக்கிரமரத்தினாவினதும் வேண்டுகோளுக்கிணங்க கள்ளுக் கொட்டில் மூடப்படுவது சம்பந்தமான தேர்தல் கடந்தவாரம் நடைபெற்றது.

## தற்கொலை

காலி, வியாழன்

ஒரே தடவையில் இரு குழந்தைகளைப் பிரசவித்தது அவமானமென்று கருதியதாகக் கூறப்படும் ஒரு தாய் விஷமருந்தி மரணமானார்.

இச்சம்பவம் மாத்தறைப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இது சம்பந்தமாக விசாரணைசெய்த திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பு அளித்தார்.

வடமராட்சியில்

## மீன்பிடி ஆலோசனை சபை நிறுவ நடவடிக்கை

அம்பன், வியாழன்

வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் பருத்தித்துறை உடுப்பிட்டி எம். பி. க்களும் கரையோர கிராமசேவையாளர்களையும் கரைவலை பாதைவலை வைத்திருக்கும் பிரதிநிதிகளும் மீன்பிடிக் கூட்டுறவு உத்தியோகத்தர்களும் கொண்ட மீன்பிடி ஆலோசனைச்சபை நிறுவுதற்கான முயற்சியை வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து மேற்கொண்டுள்ளார்.

## 'தமிழ் மொழிச் சட்டத்தை உடனே ரத்துச் செய்ய வேண்டும்'

### 'தவஸ' பத்திரிகை தலையங்கம்

கோட்டை, வியா

1966-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி உபயோக (விசேஷ விதிகள்) சட்டத்தை உடனே ரத்துச் செய்யும்படி 'தவஸ' பத்திரிகை நேற்றைய தலையங்கத்தில் வலியுறுத்தி எழுதியிருக்கின்றது

இச் சட்டத்தை ரத்துச் செய்யும்படி பல காலமாகவே தவஸ பத்திரிகைவலியுறுத்தி வந்துள்ளதை சுட்டிக்காட்டியிருப்பதுடன் அரசாங்க ஊழியர் சிங்களம் படிப்பது சம்பந்தமான கோடீஸ்வரன் வழக்கையும் தமிழ்மொழி சட்டத்துக்கு எதிராக குண்டடிபட்டு இறந்த தம்பராவே பிக்குவின் தியாகம் பற்றியும் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது

தமிழ்மொழி உபயோக சட்டம் வருவதற்கு முன்னரே சிங்களமொழிச் சட்டம்அமுலாக்கப்படவேண்டியிருக்கையில் அது அமுலாக்கப்படவுமில்லைதமிழ்சட்டம் ரத்துச்செய்யப்படவுமில்லை, என்று தலையங்கம் குறிப்பிடுகின்றது,

பாஷைப் போராட்டத்தில் உயிர் நீத்த தம்பரவே சுவாமியாருக்கு ஞாபகச் சின்னம் எழுப்புமுன்பு அந்த அநீதிச் சட்டத்தை ரத்துச் செய்யவும் ரத்துச் செய்யக் கூடியதாகவும் வசதியிருந்தது என்பதை எவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும், மனப்பூர்வமாக பணியாற்றுவதானால் அந்த அநீதிச் சட்டம்உடனடியாக ரத்துச் செய்யப்பட வேண்டும். தம்பராவே சாமியாருக்கு ஏற்படுத்தப்படும் உயர்ந்த ஞாபகச் சின்னம் இதுவாகத் தானிருக்கும்,

இவ்வாறு தவஸ பத்திரிகை எழுதியுள்ளது,

## விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாக நியமனம்

கோட்டை, வியாழன்

விலைக்கட்டுப்பாட்டு பதில் அதிகாரிகளாகவும் கடமையாற்றுவதற்கு சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் நாணயவிதப் பொருட்கள் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. பி. திசநாயக்கா அதிகாரம் வழங்கியுள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களின் உதவிப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள் பலருக்கும் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர், உபதலைவர், பொதுமுகாமையாளர், மேலதிக பொது முகாமையாளர் ஆகியோரையும் பதில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. ஜே. பி. கெலேகம நியமித்துள்ளார்,

## என். எம். பேசுகையில் ..

பருத்தித்துறை, வியா

கடந்த திங்கள் நண்பகல் நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேராவின் பேச்சு பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலையில் நிகழ்ந்து கொண்டிருந்தபோது. பேச்சைக் கேட்டுக்கொண்டு மரக்கிளையில் இருந்த ஒருவர் முறிந்த கிளையுடன்நிலத்தில் விழுந்தார். அப்பொழுது. கூட்டத்தவர்களின் கண்களும், கவனமும் விழுந்தவர்மீது திரும்பின. அதை அவதானித்த டாக்டர் பெரேரா இச்சம்பவத்திற்கு உங்கள் கவனத்தைச் சிரத்தையுடன் திருப்பியதுபோல நாட்டை எதிர்நோக்கும் பொதுப் பிரச்னைகளிலும் எல்லோரும் ஏகமனதாக உங்கள் கவனத்தைத் திருப்பினால், இதுவரை எத்தனையோ பிரச்சினைகளைச் சமாளித்திருக்கலாம்என்றுகூறிய போது, சபையில் பலத்த சிரிப்பொலியும் கரகோஷமும்ஏற்பட்டன. விழுந்தவர் கூட அந்நகைச்சுவையிற் கலந்துகொண்டார்.

## பெப்ரவரி 1-ல் தீர்ப்பு

கோட்டை, வியாழன்

கண்டி தேர்தல் மனு மீதான தீர்ப்பு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வழங்கப்பட விருக்கிறது. இத்தீர்ப்பை கொழும்பில் நீதியரசர் திரு. ஏ. சி. ஏ அலஸ் வழங்கவுள்ளார்.

இத்தேர்தல் வழக்கில் திரு. இ. எல். சேனநாயக்கா ஆட்சிமன்றத்துக்கு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு ஜி. பி டி. சில்வா வழக்குத் தொடர்ந்திருந்தார்.

## சர்வோதய தினவிழா

கொழும்பு, வியாழன்

அகில இலங்கை காந்திய சேவா சங்க சர்வோதய தினவிழா இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்தில் அமைந்துள்ள சர்வோதய நிகேதனத்தில் அமைந்துள்ள காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்தில் இம் மாதம் 30ந் திகதி மாலை நடைபெறும்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு டி பி சுபசிங்க, தபால்தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியர். திருமதி விவியன் குணவர்த்தன எம் பி, திருமதி குசலா அபேவர்த்தன எம் பி ஆகியோர் இதில் கலந்துகொண்டுஉரைநிகழ்த்துவர்

## இடமாற்றம் ரத்து

ஊர்காவற்றுறை... காரதீவு, வியாழன்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலிருந்து நயினாதீவு மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்ட வணிக ஆசிரியர் திரு. அ. அப்பாத்துரையின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது

# ஜெயராஜ் எழுதுவது:

இந்திய குடியரசு தினத்தன்று மாலை கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தம்பதிகளின் அழைப்பின்மீது அவர்களது மாளிகையில் நடைபெற்ற வரவேற்புக்குச் சென்றிருந்தேன். சென்ற ஆண்டை விட இம்முறை அதிகக் கூட்டம், பிரதமர் ஸ்ரீமாவும் டாக்டர் கொல்வின், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா உள்ளிட்டு பல அமைச்சர்களும், பல பிரமுகர்களும் வந்திருந்தனர். அமைச்சர் பீலிக்ஸ் டயஸ், முன்னாள் மந்திரி வி. பி. டி, சில்வாவுடன் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். என்ன பேசினார்களோ தெரியவில்லை. எதுவாயினும் கட்சிப் போட்டி காரணமாக' ஒருவருக்கொருவர் பாராமலும் பேசாமலும் இருப்பதை விட்டு பல கட்சியினரும் நல்லுறவுகொண்டிருப்பது ஜனநாயக வெற்றிக்கு மிக நல்லது. ஆகவே இரு வேறு கட்சிகளைச் சேர்ந்த இவ்விருவரும் பேசிக்கொண்டிருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது,

இவ்வித சமயங்களில் பல முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும். இந்தியாவிலே வங்காளத்திலுள்ள நக்ஸல் பாரி நடவடிக்கையைப் பற்றி ஓர் அன்பர் குறிப்பிட்டு, அத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையிலே நிலைமை எவ்வளவோ தேவலாம் என்றார். இதைக் கேட்ட விஷயமறிந்த மற்றோர் அன்பர், இலங்கையிலும் சிறப்பாக வடமாகாணத்திலும் நக்ஸல்பாரி ஆபத்து ஏற்படக்கூடிய அறிகுறிகள் இருப்பதாகச் சொன்னார். வடமாகாண பொலிஸ் அதிபரும் இதைப்பற்றி சமீபத்தில் எச்சரித்தது நினைப்பு வந்தது. இதில் ஏதும் உண்மை இருப்பின். இதை தவிர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் பாதுகாப்புகளையும் இப்போதே செய்ய வேண்டும்.

0 0 0

கொழும்பிலே ஒரு பெரிய இந்திய எஞ்சினியரிங்ஸ்தாபனத்தைச் சேர்ந்த இந்திய சிப்பந்திகளுக்கெல்லாம் வெளியேற்ற உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது. இரு நிர்வாகிகளுக்கு மட்டும் விஸா நீடிக்கப்பட்டுள்ளது. இனி தாங்கள் தொழில் நடத்த முடியாதென்றும், ஸ்தாபனத்தை மூட வேண்டியதுதான் என்றும் ஒர் நிர்வாகி தெரிவித்தார்.

அதே ஸ்தாபனத்தில் பல இலங்கையரும் வேலை பார்த்து வருகிறார்கள். ஸ்தாபனம் மூடப்பட்டால் அவர்களும் வேலைஇழப்பர். அங்கு பலலாண்டுகளாக வேலை பார்க்கும் ஒரு சிங்கள டிரைவர், தயக்கு வேலை போனால் தாமும் தன் குடும்பமும் தவிக்க நேரிடும் என்று கவலையுடன் சொல்லி இவ்விஷயமாக இந்த அரசாங்கத்தின் போக்கு சரியல்ல என்றார்,

இங்கு இரத்தினக் கல் வியாபாரம் செய்யும் இந்திய வர்த்தகர்கள் எல்லாருக்கும் வெளியேற்ற நோட்டீஸ் கிடைத்துள்ளது. மார்ச்சுமாதக் கடைசிக்குள் வெளியேற வேண்டுமென்று உத்தரவாம். ஆனால் மறுபுறம் வருமானவரிக் கந்தோரிலிருந்து அமீதமான வரிகளை மனம்போனபடி போடுவதாயும், அதை ஆட்சேபித்து எழுதும் கடிதங்களுக்கு பதில் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. முந்திய வருடத்தில் விதிக்கப்பட்ட வருமானவரியைப் பார்த்தே இவ்வாண்டும் விதிக்கப்படவேண்டுமென்றும், மனம் போனபடி வரிபோடக்கூடாதென்றும். ஆகவே இதைப் பற்றி மறுயோசனை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்துக்கொண்டு பல நாட்களாகியும் பதில் இல்லையாம். புறப்படவேண்டிய திகதியும் கடந்து விடுகிறது. மறுபுறம் வருமானவரி ஆபிசிலிருந்து பதில் இல்லை. இதைப்பற்றி நிதி அமைச்சரிடம் தெரிவிக்கவே, ஒரு மணி நேரம் கூடத் தாமதிக்காமல் உடனுக்குடன் பதில் எழுதுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளாராம், ஒரு மணி நேரத்தில் பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரத்தினக்கல் கள்ளத்தனமாக வெளியேறிவிடலாமென்பது அமைச்சரின் கவலையாகும்.

விசா முடிந்து இந்தியா திரும்பியவர்களின் நிலை அங்கு எப்படி இருக்கிறதென்று ஓர் இந்திய வர்த்தகரை விசாரித்தேன். இங்கிருந்து சென்ற முதலாளிமார்கள் எல்லோருமே அங்கு இரண்டு மடங்கு சம்பாதிக்கிறார்களாம். ஆனால் இந்தியா திரும்பிய சிப்பந்திகளில் பலரது நிலைதான் வேலையில்லாமல் சங்கடமாக இருப்பதாகவும் தெரிவித்தார். அங்கு அரசாங்க மூலம் உதவிகள் அவர்களுக்குக் கிடைக்குமென்று அறிவிக்கப்பட்டதே என்று கேட்டதற்கு, அப்படிக் கிடைத்திடுப்பின் அவர்கள் சங்கடப்படத் தேவையில்லையே என்றார். இந்தியாவிலேயே வேலையில்லாக்கஷ்டம் அதிகமுள்ளது அதையே சரிவர தீர்க்க வழிதெரியாமல் இருக்கையில், இலங்கை முதலிய நாடுகளிலிருந்து திரும்புபவர்களுக்கு எல்லாம் எப்படி வேலை அளிக்க முடியும்? இது மனிதர்களைப்பற்றிய பிரச்னை, மனிதாபிமானத்துடன் காரியங்கள் செய்ய வேண்டுமென்று காலஞ்சென்ற பிரதமர் பெரிய பண்டாரநாயக்கா கூறுவார் இந்திய ஊழியர்கள் பலரும் இங்கு இருக்க விருப்பமில்லாமல் சீக்கிரத்தில் தாய்நாடு திரும்ப ஆவலுடன் உள்ளனராம். அப்படித் திரும்புபவர்கள் விஷயமாக இரு அரசாங்கங்களும் அனுதாபத்துடன் ஒத்துழைப்பின் அவர்களது கஷ்டங்களைக் கூடுமானவரை குறைக்கலாம், அந்த எளிய மக்களிபால் மனிதாபிமானத்துடன் நடக்கவேண்டுமென்று தமது கணவர் கூறியுள்ளதை பிரதமர் ஸ்ரீமா அறியாமலிருக்கமுடியாது.

0 0 0

கனடா ஹைகமிஷன் காரியாலயத்திலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. தலைப்பிலே இடதுபக்கம் ஆங்கிலத்திலும் வலது பக்கம் அதற்கு நேரே பிரெஞ்சு மொழியிலும் "கனடா ஹைகமிஷன் காரியாலயம்" என்று அச்சடித்து இருமொழிகளுக்கும் சரிசமமான அந்தஸ்து அளித்துள்ளனர். கனடாவில பிரெஞ்சு பேசுபவர்கள் சிறுபான்மையினரேயென்றாலும் சமஷ்டி ஆட்சியில் இருமொழிகளுக்கும் சமமான இடம் அளித்துள்ளனர்.

சிறுபான்மை இனத்தவராகிய ஒரு பிரெஞ்சுக்காரரான ட்ரூட்டோ அவர்களே இப்போது அங்கு பிரதமராக இருக்கின்றார். இலங்கையிலும் ஒரு தமிழர் பிரதமராக இருக்கக்கூடிய காலம் வருமா? கனடாவில் சிறுபான்மை இனத்தவருக்கு இவ்வளவு உரிமை அளித்திருக்கையில், அங்கு தனிநாடு வேண்டுமென்று கிளர்ச்சி நடக்கிறதாம்!

# யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரும் ஆசிரியர்கள் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

பிறஇடங்களிலிருந்து யாழ்ப்பாணப்பகுதிக்குப்பெப்ருவரி முதலாம் திகதி இடமாற்றம் பெற்றுவரும்ஆசிரியர்கள் விபரம் வருமாறு:

எஸ் முத்துத்தம்பி புளுமெண்டல் ஜி ரி எம் எஸ் கொழும்பு - கோண்டாவில் ஜி ரி எம் எஸ்.

எஸ் நடராசசதாட்டன்கண்டல் ஜி ரி எம் எஸ் மாங்குளம் - அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை

கே சற்குணசிங்கம் அடம்பன் மகாவித்தியாலயம்-பொக்கடி ஜி ரி எம் எஸ்.

வி என் வல்லிபுரம் நொச்சிக்குளம் ஆர் சி ரி எம் எஸ் உயிலங்குளம்-அல்லாரை ஜி ரி எம் எஸ்.

திருமதி ஆர் இம்மானுவேல் மன்னார் சென், சேவியர்வித்தியாசாலை-ஊர்காவற்றுறை தம்பாட்டி ஜி ரி எம் எஸ்.

எஸ் குமாரசாமி மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்-வாதரவத்தை விக்னேஸ்வரா.

திருமதி எஸ் மேரிதிரேசா மன்னார் சூரிகட்டைக்காடு ஆர். சி ரி எம் எஸ் - யாழ்ப்பாணம் சென், மேரிஸ். (ஒ எல் ஆர்) ஆர் சி ரி எம் எஸ்,

கே ஏ செபஸ்தியாம்பிள்ளை நிலாவெளி ஆர் சி ரி எம் எஸ். - கொக்குவில் மேற்கு சி சி ரி என் எஸ்.

பி தாமோதரம்பிள்ளை திருமலை மெதடிஸ்ற் மிசன் ரி எம் எஸ் அம்பலதிவு - ஆவரங்கால் நடராசா ராமலிங்கம் வித்தியசாலை.

ரி ரத்தினம் செல். பிரான்சிஸ் சேவியர் பாடசாலை திருமலை - தையிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை.

ஏ கருணாநிதி திருமலை ஜோசெப் ஆர். சி ஆண்கள் தமிழ்ப்பாடசாலை - அச்சுவேலி வடக்கு ஆர் சி ரி எம் எஸ்,

கே பி மரியாம்பிள்ளை திருமலை பாதுக்கை ஜி ரி எம் எஸ். - கோண்டாவில் ஜி ரி எம் எஸ்.

கே கணபதிப்பிள்ளை திருமலை கோணேஸ்வரா வித்தியாசாலை - கரவெட்டி ஞானசாரியர்.

திருமதி ரி தம்பாபிள்ளை திருமலை பிரதானவீதி எம். எம். ரி எம் எஸ் - சண்டிலிப்பாய் வரணி நிகேதான வித்தியாசாலை.

திருமதி பி. சுப்பிரமணியம் மட்டக்களப்பு எம் எம் ரி எம் எஸ் மொரக்கட்டான்சேனை—சரணவாய் பொன்னம்பலம் வித்தியாசாலை.

ஜி. ரி. திருநேசசிங்கம் அரசடி ம. வி. மட்டக்களப்பு—நவாலி அட்டகிரி ரி எம் எஸ்

எஸ் கணேசன் கோட்டைமுனை ம வி மட்டக்களப்பு—கோப்பாய் ம வி,

திருமதி எம் சின்னையா கனுவாஞ்சிக்குடி ஜி ரி எம் எஸ்-கோண்டாவில் கிழக்கு ராமகிருஷ்ணமிஷன் ரி எம் எஸ்

திருமதி வி வேலுப்பிள்ளை சென். மேரிஸ் ரி எம் எஸ் கேகாலை—மிருசுவில் வடக்கு ரி எம் எஸ்

கே சரவணமுத்து தமிழ் வித்தியாசாலை, புஸத்தொகுபிட்டியகேகாலை— மாவிட்டபுரம் அமெரிக்கன் மிஷன் ரி எம் எஸ்

வி முத்துக்குமாரு பலாங்கொடை சி சி ரி எம் எஸ்—கறுக்காய்தீவு ஜி ரி எம் எஸ்

ஏ நடராசா இரத்தினபுரி சரிபுத்தா ம வி—பண்ணாகம் ம வி

எஸ் சங்கரப்பிள்ளை இரத்தினபுரி ஜி ரி எம் எஸ்—ஏழாலை ஐசிடோர் ஆர் சி ரி எம் எஸ்

எஸ் கந்தையா இரத்தினபுரி ஜி ரி எம் எஸ்—புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா.

எஸ் பாலசிங்கம் ஆத்திமோட்டை ஜி ரி எம் எஸ் இலுப்பைக்கடவை — சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

திருமதி வி பத்தினிப்பிள்ளை பாரஹடேனியா ஜி ரி எம் எஸ் விதுலைவ, குருநாகல்—யார்க்கருவிநாயகர்வித்தியாசாலை.

செல்வி ஏ விக்ரோறியா தோருஜய ஜி எம் எம் எஸ் குருநாகலை—யாம். மத்திய கல்லூரி.

செல்வி ரி வேலுப்பிள்ளை முவன்கண்டே ஜி ரி எம் எஸ் குருநாகலை—குடும்பசிட்டி பொன் பரமானந்தா வித்தியாசாலை.

செல்வி எம் யோகேஸ்வரி பாரஹிடேனியா முஸ்லிம் ம வி விதுலைவ குருநாகலை - மயிலிட்டி வடக்கு எம் எம் ரி எம் எஸ்.

திருமதி கே ராஜதுரை இர்பான் முஸ்லிம் ம வி பொல்ஹாவெல—கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி.

ரி தியாகராசா ரண்டினியா ஜி எம் வி மாஹேறா— சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

பி சாமுவேல் வன்னிகுடாவெல ஜி எஸ் ரி எம் எஸ் கக்கமுவ—வசாவிளான் குட்டியப்புலம்.

பி பரமசாமி மாங்குளம் ஜி ரி எம் எஸ் —மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை.

திருமதி எம் மயில்வாகனம் பாவற்குளம் யூனிற்-2 ஜி ரி எம் எஸ்—அல்வாய் தெற்கு அம்பாள் வித்தியாசாலை.

என். திருநாவுக்கரசு நோட்டிங்கில் ஜி ரி எம் எஸ் கஹபதவெல, குருநாகலை—வலந்தலை தெற்கு ஏ எம் ரி எம் எஸ்.

கே குமாரசாமி மத்திபோல ஜி எம் எம் எஸ் மாத்தளை —துணுக்காய் ஜி ரி எம் எஸ்.

(தொடரும்)

## 'எதிரி கள்ளுக்கொட்டில் போவதைக் கண்டேன்'

### பூநகரி கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''இறந்தவர் தனக்குச் சொந்தமாக வைத்திருந்த காரை வாடகைக்கு விட்டு உழைப்பது வழக்கம். அவரே காரை ஓட்டுபவருமாவார். சம்பவம் நடந்த தினம் மாலை ஏழு மணியளவில் நான் பரந்தன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் போனேன். லொறியில் நான் போகும்போது வழியில் அதாவது இயக்கச்சியில் இறந்தவர் தனது காரை பரந்தனை நோக்கி நிற்குமாறு வீதியில் நிற்பாட்டிவிட்டு காருக்கு அருகில் நின்றதைக் கண்டேன். காரில் இருந்து பதினைந்து யார் தூரத்தில் ஆங்கில உடை அணிந்த மூவர் போவதைக் கண்டேன். அவர்களில் ஒருவராக முதலாம் எதிரி இருந்தார். அவர்கள் மூவரும் கள்ளுக்கொட்டிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். நான் நின்று பார்க்காது நேரே போய் விட்டேன். முதலபம் எதிரி எனது கடைக்கு சாப்பிட வருவது வழக்கம். சம்பவம் நடந்த மூன்றுவது தினம் பொலிசார் எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்கள்''

பூநகரிக் கொலைவழக்கு யாழ் நீதிபதி திரு. கொலின் டீ மென்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த லொறி உரிமையாளரான சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னையா சிவகுரு மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கில் கடந்த வருடம் வைகாசி மாதம் பதினோராம் திகதி சிதம்பரராசா என்பவரைக் கொலை செய்ததாக வீரசிங்கம், கந்தசாமி ஆகியோர் மீது பொலிசார் குற்றம்சாட்டியுள்ளனர்மேல்விசாரணையை நீதிபதி அடுத்தமாதம் பதினோராம் திகதிக்கு ஒத்திவைத்தார்: எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர்.விசுவநாதன் ஆஜரானார்.

— —

## பழுதடைந்த வீதி

தாவடி, வியாழன்

கடந்த மழையின் காரணமாகப் பழுதடைந்த நிலையில் போக்குவரத்துக்குக் கஷ்டமானவாறு கொக்குவில் ஸ்ரேசனுக்கு அருகாமையில் உள்ள வீதி காணப்படுகிறது.

## திருத்தம் கொண்டுவரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசியல் சாஸனம் பற்றி அடிப்படைத் தீர்மானங்களை யாழ்ப்பாணம் சுதந்திரக் கட்சிக் கிளையினர் சுமார் 3 மணிநேரம் ஆராய்ந்த பின்னர் திருத்தங்கள் சமர்ப்பிப்பதற்காக ஐவர்கொண்ட குழுஒன்றை நியமித்தனர்.

திரு. ஏ. ரி. துரையப்பா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், கிரியல்ல எம் பி திரு. நாணயக்காரா, இரத்தினபுரி எம் பி திரு நந்தா எல்லவெல ஆகியோரும் கலந்துகொண்டனர்,

கடந்த தேர்தலில் தெற்கில் வகுப்புவாதிகளை மக்கள் ஒழித்துக்கட்டிவிட்டதாகவும், வடக்கிலும் தமிழ் மக்கள் வகுப்புவாதிகளை ஒழித்துக்கட்டவேண்டும் என்று இரத்தினபுரி எம் பி திரு நந்தா எல்லவெல கூறினார்.

வடக்கு-தெற்கு என்றும் பாகுபாடின்றி நாட்டின சகல பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் நாட்டை முன்னேற்ற, சகல மக்களும் ஒன்றுபடவேண்டும் என்றும் அவர் கூறினார்.

— —

## நகர மண்டபம் நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரியில் நகரமண்டபம் ஒன்று நிறுவுவதற்கான ஆலோசனை நடைபெற்றுவருகிறது. தற்பொழுது வாடிவீடுஅமைந்துள்ள காணியில் இம்மண்டபத்தை நிறுவுவதற்கான வசதி இருக்கிறது.

சாவகச்சேரி நகரசபை தலைவர் திரு. சு. கனகரத்தினம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. கனகரத்தினம் மேலும் கூறியதாவது!

வரியிறுப்பாளர்களிடமிருந்து நிலுவையாக சுமார் ஒரு லட்சம் ரூபாவிற்குமேல் வசூலிக்கவேண்டியிருக்கிறது. நிதி கிடைத்ததும் நூல்நிலையத்திற்கும் வசதியான கட்டடமொன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வருடத்தில் இன்னும் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவிருக்கின்றன,

## பரீட்சையில் சந்தேகித்த மாணவி தற்கொலை

அனலைதிவு. வியாழன்

அண்மையில் நடந்து முடிந்த ஜி. சி. ஈ. பரீட்சையில் திறமையாகச் செய்யவில்லை என்ற காரணத்துக்காக ஒரு மாணவி தனது உயிரையே மாய்த்துக்கொண்ட பரிதாப சம்பவமொன்று அனலைதிவில் நடைபெற்றுள்ளது.

அனலைதிவு ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இராசையா கமலாதேவி (வயது 16) என்பவரே தற்கொலை செய்தவராவர். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற கமலாதேவி, ஜி சி ஈ. பரீட்சையில் திறமையாகப் பாடங்களை எழுதவில்லை என்ற காரணத்தினால் கவலையடைந்திருந்ததாகவும், தற்கொலை செய்துகொண்டதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்றும் இறந்தவரின் தந்தையாரான ஆசிரியர் திரு. கே' இராசையா சாட்சியமளிக்கையில் கூறினார்.

அனலைதிவு திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. ச. க. சிவனடியான் முன்னிலையில் உதவி வைத்திய அதிகாரி திரு எஸ். பாலசுப்பிரமணியம். இறந்தவரின்மாமனான சிவசம்பு தியாகராசா ஆகியோர் சாட்சியமளித்தனர்

''பிரயாண வசதியோ அல்லது அம்புலன்ஸ் மோட்டார் வள்ளமோ இருந்திருந்தால் இதுபோன்ற பரிதாப மரணங்களை ஒரளவு தவிர்த்திருக்கமுடியும் என்றும் அரசாங்கம் இவற்றைக் கருத்திற்கொண்டு அம்புலன்ஸ் படகை விரைவில் சேவைக்கமர்த்தவேண்டும்'' என்றும் மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பின்போது கூறினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

......

## இன்றைய பலன்

தை மாதம் 16-ந் திகதி

(29-1-71)

மேஷம்- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். இன்று பொன்னாள்.

ரிஷபம்- வாழ்க்கை இன்று வசதி நிறைந்ததாக இருக்கும். அயலவர்கள் உங்களை அன்புடன் உபசரிப்பார்கள்.

மிதுனம்- செய்தொழிலால் சிறப்பு கிடைக்கும். வழக்குவிவகாரங்களில் வெற்றிஉண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

கடகம்- திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம், அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திருப்பமுடியும்.

சிம்மம்- பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். இன்று பொன்னாள்

கன்னி-நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலைவாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

துலாம்- இலட்சியப்பாதையில் வெற்றிநடை போடுவீர்கள். உயர்வட்டத்தின் அன்பும் அவசியம் கிடைக்கும். பதவிஉயர்வுக்கும் இடமுண்டு.

விருட்சிகம்- ஒலிபரப்பும் வாழ்க்கை. உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம், பொன்னான தினம்.

தனுசு- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள். சகலதுறைகளிலும் முன்னேற்றமுண்டு

மகரம்- கடுட்பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராதவகையில் பொருட்செலவுக்கு இடமுண்டு. அதிக சிந்தனைக்கு இடம் உண்டு.

கும்பம்- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில்சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம்.

மீனம்- இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம். புதிய உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## "தமிழாசிரியர் புறக்கணிப்பு"

யாழ்ப்பாணம், வெள்ளி

''இலங்கையில் உள்ள பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழாசிரியர்களின் பிரதிநிதித்துவம் மத்திய இடமாற்றச்சபையில் சரியான முறையில் பிரதிநிதித்துவப்படவில்லை. இதனை எமது சங்கம் வன்மையாக எதிர்க்கிறது என்றும் தொழிற்சங்க நடைமுறைகளில் பூரண நம்பிக்கையுடையதும், மத்திய இடமாற்றச் சபையொன்று இருக்கவேண்டும் என்று நெடுங்காலமாகக் கோரி வந்ததும் முற்போக்கு சோஷலிசக் கல்வி முறையமைப்புகளுக்காக முன்னின்று உழைப்பதுமான எமது சங்கத்திற்கு மத்திய இடமாற்றச் சபையிலோ பிராந்திய இடமாற்றச்சபைகளிலோ பிரதிநிதித்துவம் தரப்படாதது பெரும் அநீதியாகும்''

இவ்வாறு அகில இலங்கைச் சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப் பாடசாலைகள் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. திருநாவுக்கரசு புங்குடுதீவில் நிகழ்ந்த பிரஜாப சங்கத்தின் தீவுப் பகுதிக் கிளையின் விசேட பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு திரு. எஸ். கைலாயபிள்ளை தலைமை வகித்தார்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 29—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்ட 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 அதிப்பாடல்கள், 7-15 பண்ணாரிந்தமிழ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீ. அல்ட 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீ. அல்ட 61 மீ.

மாலை 4-30 கல்வியொலிபரப்பு, 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 வயலின், 7-00 பிறநாட்டுத் தேசிய பாட்டுக்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கல்விஒலிபரப்பு, 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

# 'கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் வீரர்கள்'

## யாழ். மக்களுக்கு அதிகாரி பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"யாழ் நகர மக்கள் கல்வி அறிவில் மட்டும் உயர்ந்தவர்கள் அல்ல. இவர்கள் விளையாட்டிலும் உயர்ந்துவிட்டார்கள் என்பதற்கு இன்றைய ஆட்டம் ஓர் எடுத்துக்காட்டாகும். வடமாகாணத்தில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுகளின் தரத்தை உயர்த்துவதற்கு இன்றைய அரசாங்கம் தன்னாலான உதவிகளைச் செய்வதற்குக் காத்திருக்கின்றது. இன்றைய இந்த வைபவத்தில் நான் கலந்து கொண்டதை யிட்டு மகிழ்ச்சியும்பெருமையும் அடைகின்றேன்."

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். விளையாட்டரங்கில், நடைபெற்ற உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டத்துக்கு, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட விளையாட்டுப்பகுதி அதிபர் திரு ஒஸ்ரின் ராஜகருணா கூறினார்.

மகாஜனா - கொக்குவில் இந்து கல்லூரிகளிடையே நடந்த இந்தஇறுதி ஆட்டம் ஆரம்பமாகி பத்து நிமிடங்களுக்கிடையில் கொக்குவில் கோஷ்டியினரே 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப்போட்டனர். இதன் பின் ஆட்டம் பார்ப்பதற்கு ரசிப்பாகக் காணப்பட்டது. இடைவேளைக்கு சற்று முன்பாக, மகாஜனாக் கோஷ்டியின் முன்னணி வீரர் மோகன்ராம் மிகச்சாதுரியமாகதலையால் அடித்து ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் தலா 1-1 கோல்களைப் பெற்றிருந்தனர்.

மகாஜனக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் ஸ்ரீகாந்தன், எதிர்க்கோஷ்டியினரின் பல மின்னல் தாக்குதல்களை மிக இலகுவானமுறையில் முறியடித்தது பாராட்டத்தக்கதாக இருந்தது.

ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது, மகாஜனக் கோஷ்டியின் வலது முன்னணி வீரர் கெய்ஸர் இரண்டாவதுகோலைப்போட்டார்.

ஆட்டமுடிவில் மகாஜனக் கல்லூரி 2—1 கோல்களால் கொக்குவில் இந்துக்கல்லூரியை தோற்கடித்து, "அகில இலங்கை பாடசாலை சாம்பியன்" என்ற பட்டத்தை முதன் முதலில் பெற்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் முதல் தடவையாக மாவட்டப் பாடசாலை சாம்பியன்களிடையே நடாத்தப்பட்ட இந்த நொக்கவுட் போட்டியில சாம்பியனாகவந்த, மகாஜனக்கல்லூரிக்கு, "சேர் ஜோண்டாபட்" வெள்ளிக்கேடயமும், இரண்டாவது இடத்தைப்பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு 'கிட்' வெள்ளிக்கேடயத்தையும் விளையாட்டமைச்சின் தலைவர் திரு. ஒஸ்ரின் ராஜகருணா வழங்கினார்.

இப்போட்டியில் அகில இலங்கையிலுமிருந்துகலந்து கொண்ட எல்லாக் கல்லூரிகளுக்கும் இலங்கை பாடசாலை விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. சில்வாவும், யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தலைவர் திரு ஈசபாலிங்கமும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

—— சே நி

## புதிய நிர்வாகிகள்

பள்ளம்புலம், வியாழன்

பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கட்டுப்பிட்டி ார்த்தனைச் சபைப் பொதுக்கூட்டத்தி- பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. நா. பரமானந்தசிவம், உபதலைவர்: திரு. நா. இராசதுரை, செயலாளர்: திரு. பொ கனகநாயகம், உபசெயலாளர்: திரு. வே சுப்பிரமணியம், பொருளாளர்: திரு. பொ. கனகநாயகம், கணக்குப் பார்வையாளர்: திரு ச. சோதிலிங்கம்.

0 0 0

பாலமுனை, வியாழன்

நிந்தாவூர் தொகுதியைச் சேர்ந்த பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றத்தினரின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: ஏ. சாகுல் ஹமீட் (ஆசிரியர்) தலைவர் ஜனாப் எச். எம். உசைன், உபதலைவர்: ஜனாப் ஐ. ஆதம்லெவ்வை, செயலாளர்: ஜனாப் எம் எம். பாறூக், உபசெயலாளர்: ஜனாப் ஏ. வஹாப், பொருளாளர்: ஜனாப் ஐ. யூனூஸ் லெவ்வை, கணக்குப் பரிசோதகர்: ஜனாப் யூ. அபூபக்கர்.

மேற்படி மன்றத்தினரால் வெளியிடப்படும் "பூமாலை" இலக்கிய மாத இதழ் ஆசிரியராக ஜனாப் அன்புடீன் தெரிவு செய்யப்பட்டார்.

## 'கொள்கைக்காக வாழ்ந்தவர்'

பருத்தித்துறை, வியா

'இளமையில் கலக்கப் புரட்சிபற்றியும் கொள்கை பற்றியும் வானளாவப் பேசிவிட்டு வயோதிபத்தில் வரட்டு வேதாந்தங்களைக் கடைப்பிடிப்பதை உலகம் கண்டிருக்கிறது. ஆனால் மறைந்த திரு. சண்முகம் சபாரத்தினம், உள்ளத்தாலும் முற்போக்குக் கொள்கையாலும் எடுத்த கருமத்தைத் திறமையுடன் முடிக்கும் ஆற்றலாலும் வாலிபராகவே இறக்கும் வரை வாழ்ந்தார்.

இவ்வாறு மறைந்த திரு. ச. சபாரத்தினத்திற்குஉடுப்பிட்டித் தொகுதிக் கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளன ஆதரவில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. பொன். குமாரசாமி கூறினார். திரு. ஏ. தெட்சணாமூர்த்தி ஐயர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். செல்லையா பேசும் போது, மறைந்த சபாரத்தினம் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு நிறைந்தவரென்றும் அவ்வித பண்பாளரே கட்சியைக் கட்டி வளர்க்க கூடியவர்களென்றும் குறிப்பிட்டார்.

## நாமாவளி

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 30ந் திகதி காந்திஜி சிரார்த்ததினத்தை யொட்டி யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிற்சாலையினர் 'ரகுபதிராகவ' எனத் தொடங்கும் பஜனை நாமாவளியை இலவசமாக வெளியிட்டுள்ளனர்.

......

## வண்ணாத்திப்பூச்சி

யாழ்ப்பாணம், வியாழன்

சாவகச்சேரி உயர் வகுப்பு மாணவர்கள் நடத்திய ஆராய்ச்சியின் பின்னர் வண்ணாத்திப்பூச்சி, புலுணிப் பறவை, உடும்பு போன்ற ஜெந்துக்கள் வடபிரதேசத்தில் சில ஆண்டுகளாக மிகவும் குறைந்து காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

நவீன பூச்சிமருந்துகளைப் பயிர்களுக்குத் தெளிப்பதனால் வண்ணாத்திப்பூச்சி போன்றவை அதிகம் இல்லாது மறைந்துள்ளதாக அவர்கள் கூறிவருகின்றனர்.

(கு.வி.ம)

## கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை

அளவெட்டி, வியாழன்

'சலரோக சுகயீனத்தால் நீண்டகாலமாகப் பீடிக்கப்பட்டிருந்த 7 பிள்ளைகளின் தந்தையொருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

அளவெட்டி முதலாம் வட்டாரத்தைச்சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா வயது 56) என்பவரின் மரணவிசாரணையை அளவெட்டி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ச.க. சிவனடியான் நடத்தினார்.

இறந்தவரின் மனைவி செல்லையா சின்னத்தங்கம் சாட்சியமளிக்கையில் தங்களுக்கு 7 பிள்ளைகள் உண்டென்றும் சுகவீனத்தால் பீடிக்கப்பட்டிருந்த தமது கணவர் தம்மை அடிக்கடி துன்புறுத்தி வந்ததாகவும் சம்பவ தினமிரவு தமது கணவருக்குப் பயந்து தமது சகோதரியின் வீட்டில் தாம் படுத்திருந்ததாகவும் மறுநாட்காலை கணவன் கழுத்தில் சுருக்கிட்டு இறந்துகிடப்பதைக் கண்டதாகவும் தெரிவித்தார்.

செ நாகேந்திரம், அம்பலவாணர் வைத்தியநாதி, செல்லையா கமலாதேவி ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்ட மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# ஆசிரியர்கள் தங்கள் லீவைக் குறைக்க வேண்டும்

### -- கல்வியதிகாரி

முள்ளியவளை, வியாழன்

பாடசாலை முதல்வர்கள் உயர்தர வகுப்புகளில் ஒரு சில பாடங்களையாவது கற்பித்து மாணவர்களை நல்ல தேர்ச்சியடையச் செய்தல் வேண்டும். பாடசாலைகளில் குறைந்தது 3 வைபவங்களையாவது நடத்துதல் அவசியமானதாகும்

முல்லைத்தீவு வட்டாரப் பாடசாலைகளின் அதிபர்கள் உப அதிபர்கள் தலைமையாசிரியர்கள். சிரேஷ்ட உதவியாசிரியர்கள் ஆகியோர்களால் இம்மாதம் 20ந் திகதி கூட்டப்பட்ட கூட்டமொன்றில் உரையாற்றிய முல்லைத்தீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. டபிள்யு. ஆர். அருளையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

" ஆசிரியர்கள் குறைந்த லீவு எடுக்கவேண்டும். பெற்றோர், ஆசிரியர் உதவியுடன் பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றவேண்டும்."

இக்கூட்டத்தில் பரீட்சைகள், வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே போட்டிகள் கருத்தரங்குகள் விளையாட்டுப் போட்டிகள் முதலியன நடத்துதல் ஆசிரியர் குழுக்களை அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது

திரு நா. கந்தையா முல்லைத்தீவு வட்டாரத் தலைமையாசிரியர் சங்கத்தின் காரியதரிசியாக இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

......

## புதிய கரபந்தாட்டக் குழு

தாவடி, வியாழன்

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சன சமூக நிலைய இளைஞர்களால் கரபந்தாட்டக்குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரு. அ கனகலிங்கம் தலைமைவகித்தார் விளையாட்டுக்குழுச் செயற்படுத்துநராக, திருவாளர்கள் கு. குமாரலிங்கம், அ மகாலிங்கம், க. கமலநாதன் ஆகியோரும் தெரியப்பட்டனர்.




உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றுண்டு காலமாக இலங்கையின் விவசாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னோடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச்சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்

த. பெ. இல. 11. கொழும்பு.




யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவை அரசாங்க அதிபர் வரவேற்றபோதும், அமைச்சர் கலந்து கொண்ட ஒரு வைபவத்தின்போதும் எடுத்துக் கொண்ட படங்கள்: அமைச்சருடன் திரு பி நாகலிங்கமும் திரு அ விசுவநாதனும் நிற்பதையும் காணலாம். படம்: சிட்டு

# உகண்டா நெருக்கடியில் தான்சானியா தலையீடு?

கம்பாலா, ஜன 27

உகண்டாராணுவ அரசாங்கத்தின்மீது தான்சானியா படையெடுக்கும் அறிகுறி காணப்படுகிறது என உகண்டாராணுவ ஜெனரல்தெரிவித்துள்ளார் தாக்குதல் நடந்தால் அதற்கான பதில் தாக்குதல் நடாத்தி எதிரிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்

தன்சானியாவில் தற்சமயம் தங்கியிருக்கும் கவிழ்க்கப்பட்ட அரசின் அதிபர் திரு மில்டன் ஒபட்டேதான் இன்னும் அதிகாரத்தில் இருப்பதாக இன்று அறிவித்திருக்கிறார்

உகண்டாவில் அவசரகால நிலைமை தொடர்ந்து அமுலிலிருப்பதாகவும் இராணுவ வீரர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் உகண்டா வானொலி அறிக்கையொன்று கூறுகிறது அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது வெளியார் தலையீட்டை அனுமதிக்கமுடியாது வெளியார் தலையீடுகள் சகல நிலைகளிலும் எதிர்க்கப்படும்

இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்த தன்சானியா அதிபர் பிரயாணத்தை இடையே நிறுத்திவிட்டு தான்சானியாவிற்கு நேற்றுத் திரும்பியுள்ளார் உகண்டாவின் நெருக்கடி கவலையளிக்கக்கூடிய அறிகுறிகள் தெரிவதாக அரசியல் வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

## அழகிரிசாமிக்கு பரிசு

சென்னை, ஜன 27

பாரத சாகித்திய அக்கடமியின் தமிழுக்கான பரிசு திரு கு அழகிரிசாமிக்கு வழங்கப்பட்டிருக்கிறது மொத்தம் 16 மொழிக்கான பரிசு பெறுபவர்களின் பெயர் இன்று அறிவிக்கப்பட்டது இப்பரிசின் மொத்த தொகை 5000 ரூபா ஆகும் பெப்ரவரி 21-ந் திகதி நடைபெறும் சிறப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்

சமஸ்கிருத மொழிக்கான பரிசை திரு. சுப்பிரமணிய சாஸ்திரிக்குவழங்கப்பட்டுள்ளது அழகிரிசாமியின் சிறுகதையான அன்பளிப்பு என்னும் சிறுகதைக்கு தமிழுக்கான பரிசு வழங்கப்பட்டுள்ளது.

— —

## ‘கடல்படு திரவியங்கள் நாடுகளிடம் சமபங்கு

கோட்டை, புதன்

கடல் எல்லை 12 மைல் தூரமாக இருப்பதை ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், சில நாடுகள் கடல் எல்லை 20மைலாகஇருக்கவேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்ததாகவும்ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைக் குழு அங்கத்தவரான நீதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திமால் ஜெயவிக்கிரமா இன்று தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது:

கடல்படுத் திரவியங்கள் நாடுகளிடையே சமமாகப் பங்கிடப்படவேண்டும். அதற்கு நாடுகளிடையே திட்டம் வேண்டும் ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனையின் 12-வது மகாநாடு இன்று முடிவடைந்தது இதில் 17 நாடுகள் கலந்து கொண்டன முன்னாள் நீதியரசர் எஸ் பெர்னாண்டோ கியூ சி தலைமையில் மகாநாடு நடைபெற்றது அடுத்த மகாநாடு நைஜீரியாவில் நடைபெறவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது

## தீவுப்பகுதி மாணவரின் எதிர்காலம்

ஊரதீவு, வியாழன்

"தீவுப்பகுதியிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நோக்குமிடத்து இப்பகுதி மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்த நிலையில் இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் வேறு இடமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் இந்த நிலை தொடருமாயின் தீவக மாணவர்களின் எதிர்காலமே பாழாகிவிடும்"

இவ்வாறு கூறும் கடிதமொன்றை ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தினர் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

— —

## கி ச. தலைவர்

நல்லூர், புதன்

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள முகமாலை கிராம சபையின் புதிய தலைவராக திரு ஸ்ரனிஸ்லஸ் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

— —

கோட்டை, புதன்

கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு வள்ளம் வழங்கும் திட்டத்தை மீன்பிடி மந்திரி ஜோர்ச் ராஜபக்ச இன்று ஆரம்பித்து வைப்பார் இவ்வைபவத்தில் மீனவர்களிடம் மந்திரி காப்புறுதிப் பத்திரத்தையும் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜீவனாம்சம் கோரிய மனைவியை வெட்டித் தாமும் தற்கொலை

வெலிமடை, வியா.

தமது மனைவிக்கு ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்ற காரணத்துக்காக சிறைவாசம் அனுபவித்துவிட்டு சிறையிலிருந்து வெளியேவந்த ஒருவர் தமது மனைவியை வாளால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்தசம்பவம் ஒன்று வெலிமடைப் பொலிஸ்பகுதியில் நடைபெற்றுள்ளது.

மனைவியை ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது கே. எம். புஞ்சிபண்டா என்ற அந்தநபர் கடைசியில்தாமே நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

மனைவியை விட்டுப்பிரிந்து வேறிடத்தில் வாழ்ந்துவந்த இவரிடம் மனைவி ஜீவனாம்சம்கோரியதே இவர் மனைவியைக் கொலைசெய்யமுயன்றதற்குக் காரணம்என்றுகூறப்படுகிறது.

தற்கொலை செய்துகொண்டவரின் மரணவிசாரணையின்போது இத்தகவல்களை அவர்களின் புதல்வியான 02 வயது நிரம்பிய புண்ணியலதா கூறினார்.

# பிரிட்டனின் வாதம் அர்த்தமற்றது

— தான்சானிய அதிபர்

புதுடில்லி, ஜன 27

இந்துமா கடலில் சோவியத் கப்பல்கள் நிலைகொண்டிருப்பதன் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்கப்பட விருப்பதாக பிரிட்டன் கூறுவது சரியான வாதமல்ல இந்துசமுத்திரத்தில் சோவியத் நடமாட்டம் அபாயகரமாக இருந்திருந்தால் இதுகுறித்து அமெரிக்காவும் கவலைப்பட்டிருக்கும் என்று தான்சானியா அதிபர் நிஸாரரே கூறினார். அதிபர்நிஸாரரே பத்திரிகை நிருபர்களிடம் பேசினார்.

மிகத்தீவிர இனவெறிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் பாதுகாப்பளிக்கின்றது என்று அதிபர்நிஸாரரே குற்றஞ்சாட்டினார்.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்குவதால் அதன் சுற்றுவட்டத்திலுள்ள நாடுகளுக்கும் ஆபத்து. பிரிட்டன் வழங்கியுள்ள கப்பல்களில் தென்னாபிரிக்கர்களுக்கு கெதிராக பயிற்சி அளிக்கப்படுகின்றது இது பின்னர் மற்ற நாடுகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படலாம் என்றார் அவர்.

### பிரிட்டனின் உரிமை

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்கும் விஜயம் குறித்து முடிவெடுக்கும் உரிமை பிரிட்டனுக்கு உண்டென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு ஹீத் காமன்ஸ்சபையில் அறிவித்திருக்கிறார்.

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும்படி அந்த நாடு விடுத்துள்ள அழைப்பை திரு ஹீத் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## பசுவும் கன்றும் சின்னத்திற்கு எதிர்ப்பு

புதுடில்லி, ஜன 27

ஜகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல்சின்னமாக பசுவும் கன்றும் ஒதுக்கப்பட்டிருப்பதைஆட்சேபித்து நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் தேர்தல் கமிஷனுக்கு எழுதியுள்ளார்.

இச்சின்னம் பாமரமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கன்றுடன் கூடியபசுச்சின்னம் கொடுக்கப்பட்டதற்கு திரு காமராஜர், திரு ராஜாஜி ஆகியோரும்இன்று எதிர்ப்புத்தெரிவித்துள்ளார்கள்.

நிஜலிங்கப்பா காங்கிரஸிற்கு 'ராட்டணம்' தேர்தல் சின்னமாக ஒதுக்கப்பட்டுள்ளது

## ஆபாசநூல் விளைவைத்தடுக்க குழு

கொழும்பு, வியாழன்

ஆபாசஇலக்கியங்கள், சஞ்சிகைகள், புகைப்படங்கள், திரைப்படங்கள்போன்றவற்றின் மோசமான விளைவுகளைத்தடுக்க விசேடகுழுவொன்றை கலாசார அமைச்சர் நியமித்துள்ளார்

இக்குழுவினர் பொதுமக்களினதும், இவ்விடயத்தில் சிரத்தைகொண்டுள்ள சங்கங்கள், நிறுவனங்கள் முதலியவற்றின்கருத்தைப்பெறுவதற்கு அறிக்கையொன்றையும் வினாக்கொத்தையும் தயாரித்துள்ளனர் இவ்வினாக்களுக்கான பதிலை அடுத்த மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

அறிக்கை. வினாக்கொத்து என்பனவற்றின் பிரதிகளை 'ஆபாச இலக்கியம் பற்றிய விசேட குழு கலாசார அலுவல்கள்பகுதி' 135, தர்மபால மாவத்தை, கொழும்பு-7' என்றவிலாசத்துக்குஎழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

……

## எம். பி சிபார்சு

நல்லூர், வியா

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சலுசலா' என்பனவற்றின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக ஏழு பேரை தீவுப்பகுதியில் இருந்து பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. வர்த்தக அமைச்சர் திரு. டி. பீ. இலங்கரத்தினாவிற்கு சிபார்சு செய்துள்ளார்.

திருவாளர்கள் தாமோதரம்பிள்ளை, வே. இராசையா, ஆ. நமசிவாயம், ச. திருநாவுக்கரசு, எஸ், தயாபரராசா, மு. குணசிங்கம், ச. அருமைநாதர் ஆகியோரையே திரு இரத்தினம் சிபார்சு செய்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது